"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

நீங்கள் கேட்டது!

சத்தியவேத பாதுகாவலன்

வருட சந்தா

இலங்கை : ரூபா 6-00

வெளிநாடுகள் : ரூபா 6-50

தனிப்பிரதி சதம் 10

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு ஐப்பசி மீ 13-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம்

# அகிலமும் செபத்தால் இணையவேண்டும்

## முதலில் வந்துசேர்ந்த ஆயர்

பொதுச்சங்கத்தில் பங்குபெறுதற்கென விமானமூலமாகவும், கப்பல், ரயில்வே வழியாகவும் உலகின் பலபாகங்களிலுமிருந்து ஆயர்கள் ரோம்நகரைநோக்கிச் சென்றனர் அல்லவா? இவர்களில் முதலாவதாக ரோமை அடைந்தவர் கர்தினல் பார்பெறி ஆவர்.

உருகுவே தேசத்தைச் சேர்ந்தவர் இவர். மொன்ரோவிடேயோ அதிமேற்றிராணியார். விமானமூலம் இவர் பிரயாணம் செய்தார்.

திவ்விய இஸ்பிரீத்துவே எழுந்தருளும் எனத் திருச்சபையின் தலைவர் குரலெழுப்ப, இரண்டாயிரத்துக்கு மதிகமான ஆயர்கள் தொடர்ந்து இசைக்க இந்த நூற்றூண்டில் திருச்சபையின் வரலாற்றுச்சிறப்பைப் பெறவிருக்கும் இருபத்தியோராவது திருச்சபைப் பொதுச்சங்கம் இராயப்பர் மகாலயத்தில் ஆரம்பமாகும்,

அன்றுதினம் திருச்சபையின் ஆயர்களின்மீது தேவஅனுக்கிரகத்தை வேண்டி அகிலஉலகும் செபதபமுயற்சிகளால் இணையும். ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் தேவஅருளை இரந்து விசேட பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்படும். திவ்விய சற்பிரசாதநாதரை எழுந்தேற்றம்செய்து அவரின் முன்பாக செபமாலையோதும் சடங்குகள் பல தேவாலயங்களிலும் நடைபெறும்.

ஏராளமான பொருட்செலவில் மூன்றுவருட கடுமையான உழைப்பின்பின்னர், பல இன்னல்கள் மத்தியில் சங்கம் ஆரம்பமாகிறது. சங்கத்தின் நலன் கத்தோலிக்கர் அனைவருக்குமே பயன்படும். எனவே பொதுச்சங்க சித்திக்காக ஒவ்வொரு கத்தோலிக்கரும் செபித்தல்வேண்டும். செபத்தின்மூலம் ஒவ்வொரு கத்தோலிக்கரும் திருச்சபைச் சங்கத்துடன் இணைதல்வேண்டும், என பொதுச்சங்க நிர்வாக குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கருதினல் மாளிகையில் வெடிகுண்டு

நியுயோர்க் கர்தினல்ஸ்பெல்மன் ஆண்டகையின் மாளிகையில் அண்மையில் வெடிகுண்டொன்று வெடித்தது சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு நியூயோர்க்நகர அதிகாரிகள் விசேட துப்பறியும் நிபுணர்கட்கு உத்தரவிட்டுள்ளனர்.

மாளிகையின் கீழ்ப்பகுதியில் வெடித்த குண்டின் அதிர்ச்சியும், சப்தமும் நெடுந்தூரத்துக்குப் பிரதிபலித்ததாம். எனினும் கர்தினலாண்டகை எவ்வித அபாயமுமின்றிக் காப்பாற்றப்பட்டார். சம்பவம் நடந்தபோது அவர் மேல்மாடியில் நித்திரையிலாழ்ந்திருந்தார்.

## பொதுச்சங்கம் வெற்றி அடையும்

### —மக்காரியோ அதிமேற்றிராணியார்

ரோமான் கத்தோலிக்க திருச்சபையாரின் பொதுச்சங்கம் அதன் நோக்கங்களில் வெற்றியடையும்என்பது எனது திடமான நம்பிக்கைஎன அதிமேற்றிராணியார் மக்காரியோ கூறினர்.

சைப்பிரஸ்தீவின் ஜனாதிபதியான மக்காரியோ கிரேக்க ஒதொடெக் சபையின் அதிமேற்றிராணியாராவர். அவர் மேலும் கூறியதாவது: உண்மையாகவே கூறுகிறேன், அருளப்பபாப்பரசரின் திறமைகட்கு எல்லைகூற முடியாது, பெருந்தன்மையும் விசாலமனப்போக்கும் கொண்டவர் அவர். திறந்த மனப்பாங்குடன் சங்கம் கூட்டுகிறார். அவரது அபிலாசை பூர்த்தியாகும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

## ஆயிரம் தொண்டர்கள் ஆயத்தவேலைகளில் ஈடுபட்டனர்

1959-ம் வருடம் தைமாதம் இருபத்தைந்தாந்தேதி திருச்சபையின் தலைவர் பொதுச்சங்கம் கூட்டும் யோசனையை வெளியிட்டார். அன்றிலிருந்து ஆயிரத்துக்கு மதிகமானோர் கடந்த மூன்றுவருடங்களாக ஆயத்தவேலைகளில் இரவுபகலாக ஈடுபட்டுள்ளனர்.

ஆயத்த குழுவின்முன் அகில உலகின் ஆயர்களிடமிருந்து 8000 பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. இப்பிரேரணைகள் நன்கு அலசி ஆராயப்பட்டபின் 2000 ஆக குறைக்கப்பட்டன. கடந்த ஆனியில் ஆயத்தகுழு சங்கத்தில் விவாதிக்கப்படவிருக்கும் விஷயங்கள்பற்றிய வழித்துணை நூல்களைத் தயார்செய்தது. மொத்தம் 2060 பக்கங்கள் கொண்ட 119 நூல்கள் இவற்றுள் அடங்கும். எல்லா ஆயர்களதும் பரிசீலனைக்காக இந்நூல்கள் அனுப்பப்பட்டன.

## ஆயர்கட்கு இளைப்பாற்றி நிலையம்

திருச்சபைப் பொதுச்சங்கத்துக்கென விமானமூலம் பறந்து செல்லும் ஆயர்களையும், அவர்களது உதவியாளர்களையும் பிரயாணத்தில் நடுவே உபசரிப்பதற்கெனப்பாரிஸ்விமானநிலையத்தில் ஓர் இளைப்பாற்றி நிலையம் திறக்கப்பட்டுளது.

இந்தவழியே பிரயாணம்செய்யும் விமானங்கள் பாரிஸ் நகரில் தரிக்கும். அப்போதுஆயர்களும், அவர்களது உதவியாளர்களும் இந்நிலையத்துக்குச் சென்று இளைப்பாறலாம். இங்கு திவ்விய பூசை நிறைவேற்றுதற்கென வசதியுள்ள ஓர் அறையும், பலர் ஒருங்கே உணவருந்துதற்குரிய போசனசாலையும், சிறு தங்கும் அறைகள் சிலவும் உண்டு.

பாரிஸ் நகர அதிகாரிகள் இதற்கான ஒழுங்குகளைச் செய்துதந்தனர்.

## திறந்த மனதுடன் விளங்கும் சிறந்த ஆயர்

### டைம் சஞ்சிகை பரிசுத்ததந்தையைப் பாராட்டுகிறது

அமரிக்காவிலிருந்து பிரசுரமாகும் 35 லட்சத்துக்குமதிகமான பிரதிகள் விற்பனையாகும் டைம் வாரச்செய்திச் சஞ்சிகை பரிசுத்த பாப்பரசருக்குத் தனது கடந்த வார இதழில் முக்கியத்துவம் அளித்திருக்கிறது. பாப்பரசரின் அழகியதோர் ஓவியத்தை முகப்புப்படமாகப் பிரசுரித்திருப்பதுடன் அடுத்துவரும் திருச்சபைச் சங்கத்தையும், பாப்பரசரையும் பற்றி முகப்புக்கதையாகப் பிரசுரித்திருக்கிறது.

உலகிலேயே வல்லமையுள்ள ஒரு செய்திச்சஞ்சிகை என்ற பெருமை டைம் சஞ்சிகைக்குண்டு. இலங்கையில் அதன் பிரதியொன்று ஒன்றரை ரூபாவாக விற்கப்படுகிறது. நியூயோர்க், [illegible] கியோ, [illegible] ஆகிய [illegible] நகரங்களில் ஏககாலத்தில் அதன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. உடனடியாகப் பல விமானங்கள் அவற்றை உலகின் பலபாகங்கட்கும் சுமந்து செல்கின்றன.

ஒவ்வொரு பிரதான தேசங்களினதும் ஆட்சியாளர்கள் டைம் சஞ்சிகையைப்படிப்பதைத் தமது முக்கிய அலுவலாகக் கொண்டுள்ளனர். செய்திகளைச் சுவையாக வர்ணிப்பதிலும் உண்மைச் சம்பவங்களைத் துருவி ஆராய்ந்து பிரசுரிப்பதிலும் இச்சஞ்சிகைக்கு இணையான வேறு சஞ்சிகைகள் கிடையா. டைம் இதழ்களில் வெளியாகும் கட்டுரைகள் ஆட்சியாளர்களின் குறைகளை எடுத்துக்காட்டுவதால் அந்தப்பத்திரிகைப்பிரதிகளை

[5-ம் பக்கம் பார்க்க]

## பிரித்தானியாவிலிருந்து கலந்துகொள்பவர்கள்

41 ஆயர்கள் 1 மடாதிபர்

இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, வேல்ஸ் பகுதிகளிலிருந்து 41 ஆயர்களும், 1 மடாதிபதியும் திருச்சபைப்பொதுச்சங்கத்தில்கலந்து கொள்கிறார்கள். போட்ஸ்மவுத் அதிமேற்றிராணியாரான கிங் ஆண்டகை தள்ளாப்பராயம் காரணமாகச் செல்லமாட்டார். அவருக்கு 82 வயதாகிறது.

பிரித்தானியாவிலிருந்து செல்லும் ஆயர்கட்கென ஆங்கில கழகம், பீடாகல்லூரி ஆகியவற்றில் தங்கும் வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும்செய்தி

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபையினர் தங்கள் பிதாவாகிய ஊர்துகாயப் பிரான்சீஸ்கு அசிசியாரின் திருநாளை ஐப்பசிமாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை வெகு பக்திச் சிறப்பாகக் கொண்டாடினர். திருநாளுக்கு முந்திய மூன்றுதினங்களிலும் காலையில் திவ்விய பூசையுடனும் பின்னேரம் பிரசங்கம், திவ்வியசற்பிரசாத ஆசிர்வாதம் என்பவற்றுடனும் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் ஆராதனைகள் நடைபெற்றன. திருநாளுக்கு முன் தினம் மாலை ஆராதனைகளின்பின் அர்ச். பிரான்சீஸ்குவின் திருச்சுரூபம் அழகிய கேடகத்தில் வைக்கப்பட்டுச் சபைக்கர்த்தர் வண. சீ. யோண்மேரி சுவாமியவர்கள் செபமாலை ஓதச் சபையார் பலவர்ணக்கூடுகளில் தீபவர்த்திஏந்தினவர்களாய் முன்செல்லச் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்பட்டது.

திருநாள் அன்றுகாலை சபையார் தங்கள் சபை உடை அணிந்திருக்க வண. சீ. யோண்மேரி சுவாமியவர்களால் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றப்பட்டது. அங்கத்தினர் திவ்விய விருந்தருந்தித் தேவனுக்குத் தோத்திரம் செலுத்தினர். அன்று பிற்பகல் 4 மணியளவில் நவாப்பியாசத்திற் சேர்க்கும் திருச்சடங்கு வெகுபக்தி யருட்சிக்குரியவிதமாக நடந்தேறியது. கரம்பன் கிளைச்சபையில் இருந்து 13 பேரும், மிருசுவில் கிளைச்சபையில் இருந்து 4 பேரும் சபை உத்தரியமும் கயிறும் பெற்று நவசீடராகச் சேர்ந்து கொண்டனர். சபைக்கர்த்தர் நவசீடருக்குப் புத்திமதி கூறும்போது தேவனுடைய அழைத்தலின்பேரில்தான் இச்சபையில் அங்கத்துவம் கிடைக்கிறதென்றும் தேவகற்பனைகளையும், திருச்சபைக் கட்டளைகளையும், சபை ஒழுங்குகளையும் அனுசரிப்பதற்கு இடையறுத ஊக்கம் உடையோராயிருக்க வேண்டுமென்றும் கூறினர். சபைக்கர்த்தர் அவர்களால் பொதுப் பாவமன்னிப்புப் பலனும் பரி. பாப்பாண்டவரின் ஆசீர்வாதமும் அருளப்பட்டன. பொதுக்கூட்டம் முடிந்தவுடன் தோட்ட உபசாரனை நடைபெற்றது. அப்பொழுது வெவ்வேறு கிளைகளுக்குச் சேர்ந்த அங்கத்தினர் சபைவிருத்திபற்றிக் குறிப்புரைகள் கூறினர். சபைத்தலைவர் சகோதரர் ஏ. எஸ். பிரான்சீஸ் ஒவ் மேரியவர்கள் ஊக்கத்துடன் பரிபாலித்துவரும் சபைக்கர்த்தர் சுவாமியவர்கட்கும், சபை அங்கத்தினர்க்கும் நன்றி கூறினர். ஈற்றில் சபைக்கர்த்தர் சுவாமியார், ஒவ்வொரு அங்கத்தினரும் சபையை விருத்தியாக்குவதில் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்மேல் கொண்டாட்டம் இனிதே நிறைவெய்தியது. அடுத்த நாள் மரணித்த அங்கத்தினருக்காக ஒரு திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

—நிருபர்.

## கரம்பன்

"யான் 1956-ம் ஆண்டு தொடக்கம் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றும்சபையின் பொறுப்பைக் கையேற்று நடத்தி வருகிறேன். ஆயின் இத்தனை தொகையினரை அதுவும் கரம்பன் ஊர்காவற்றுறைப் பகுதியினரை ஒரேநாளில் நவசீஷர் ஆக்கும் பணியில் இதுவரை ஈடுபடவில்லை" என வண. ஜோண்மேரி குஷரோன் சுவாமியார் அவர்கள் இம்மாதம் 4-ந்திகதி மாலை நவசீஷர் சபையில் பிரவேசிக்கும் திருச்சடங்கை நிறைவேற்றி வைத்தபின் நிகழ்ந்த மாதாந்தக் கூட்டத்தின்போது சபைப் பரிபாலனர் என்றமுறையில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

காம்பன், ஊர்காவற்றுறை, மிருசுவில் என்னும் இடங்களில் இருந்துவந்த நவசீஷருக்கு நல்வரவும், நல்லாசியும் அளிக்குமுகமாகச் சபைத்தலைவர் சகோதரர் ஏ. எஸ். பிரான்சீஸ் ஒவ் மேரி அவர்கள் ஆற்றிய உரையில் காரம்பன் வண. கட்டளைச் சுவாமியார் தமது பங்கில் நவசீஷரைப்பயிற்றும் பணியில் சென்ற சில மாதங்களாய்ப் புரிந்த அரிய சேவைகளையும், உபந்நியாசங்களையும் பாராட்டி நின்றார்.

காம்பன் அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் சென்ற புரட்டாதி மாதம் 24-ந்திகதி தொடக்கம் சின்ன மலர் ஆங்கிலப் பெண்பாடசாலை மாணவிகள் உபயத்தில் அர்ச். சின்னத் திரேசம்மாள் பேரால் நிகழ்ந்த நவதின ஆராதனையின் இறுதி மூன்று நாட்களிலும் அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றும்சபையிற் சேரவிருந்தோர்க்கென ஒரு ஞானஒடுக்கம் வண. கட்டளைச் சுவாமி அவர்களால் போதிக்கப்பட்டது.

நவதின ஆரம்பத்திலிருந்து அர்ச். சின்னத்திரேசம்மாள் தமது வாழ்க்கையில் அநுசரித்த புண்ணியக் கிரிகைகள் பற்றிய பிரசங்கங்கள் ஏழாம்நாட் தொடங்கி இரு அர்ச்சியசிஷ்டர்களினதும் தியாக வாழ்க்கைகளில் மலர்ந்த வீரத்தாழ்ச்சி, கடினதபம், சுவாலித்த தேவநேசம் ஆதிய புண்ணியங்கள் ஒவ்வோர் பீடிகையிலும் தேனும் பாலுமென விரவி ஞானஒடுக்கத்தின் தியாக சிந்தனைகளாய் அமைந்தன. ஞானஒடுக்கம் 4-ந்திகதி காலை அர்ச். பிரான்சிஸ் அசீசியார் திருநாளுடன் நிறைவெய்தியது.

ஒவ்வோர் ஞான அப்பியாசத்திற்கும் சமூகமளித்து ஊக்கம்தந்த எம் கட்டளைக்குரவர் அவர்கட்கு எமது உருக்கம் நிறைந்த நன்றி உரியதாகுக.

இச்சபை காம்பனில் சென்ற 8-4-62-இல் கிளைஸ்தாபனமாக்கப்பட்டது.

—நிருபர்.

## தாண்டவன்வெளி

கிழக்கிலங்கைத் திருச்சபை விளைநிலத்திலே புதுப்பொலிவுடன் விளங்கும் நல்நாடு தாண்டவன்வெளி. இந்த நல்நாட்டுக்குள்ளே நிகழும் ஐப்பசித் திங்கள் 2-ம் நாளது செவ்வாயன்று நடந்தது ஒரு நல்விழா. நம் நாட்டின் இருகண்களென விளங்கும் ஆண், பெண் கழகங்கள் அன்று பரிமளிப்புடன் காணப்பட்டன. நம்பங்கின் பிதா வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்கள் தம் 48-வது பிறந்ததினத்தைக் கண்டதைத்தொடர்ந்து தலைமை ஆசிரியர்கள், ஆசிரியமணி திரு. கே. எல். இராசேந்திரம், திருமதி ஈ. ஏ. நாதன், ஆசிரியர் எம். எச். ஆபிராகாம் அவர்களால் மலர்மாலைகள் சூட்டப்பட்டு வரவேற்பு ஆரம்பமாகியது. இடிகளிஞ்ஞைசையென வெடிகளதிர்ந்தன. கூடிய ஆசிரியர்கள், மாணவர்களின் காகோஷம் வானைப்பிளந்தது. சுவாமிகளின் இல்லத்திலிருந்து ஆண் பாடசாலைவரை ஊர்வலம் நடந்துகொண்டிருக்கையில் சிறுமிகள் மல்லிகைமலர்களை அள்ளிச்சொரிந்து மகிழ்வுடன் அழைத்துச் சென்றனர். விழாத்தலைவர் உரிய ஆசனத்தமர்ந்ததும் பெண்பாடசாலையினரால் வரவேற்புப்பாக்கள் பாடப்பட்டது. எட்டாண்டுகள் நம்மிடையே நம்பிதா ஆற்றிய தொண்டுகளை வியந்து, இரு தலைமை ஆசிரியர்கள், திருமதி சீ. இராசையா ஆசிரியை அவர்களால் வாழ்த்துரை, அன்பளிப்பு, ஆண்பாடசாலையினரால் வாழ்த்துப்பா, செல்வன் அருளப்பு, ஆசிரியர் கந்தசாமியால் நன்றியுரை எனும் தலைப்புகளின்கீழ் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இதன்மேல் ஒரு கதம்ப நிகழ்ச்சி ஆரம்பமாகியது. சிறுமியர் கடனங்கள், [illegible] பெறல் நாடகம், [illegible]னம், கண்ணகி காற்சிலம்புடைத்தல், வைலா முதலியன மகிழ்வூட்டும் முறையில் இருபாடசாலை மாணவ மாணவிகளினுல் நடித்துக் காட்டப்பட்டன. பின்னர், நம்குரவர் எல்லோருக்கும் நன்றிகூறி, குருத்துவத்தின் மகிமையை விளக்கித் திருக்கா ஆசீரும் மிட்டாய்களும் வழங்கினர். அன்று பங்கினர், பக்திச்சபைகள், அன்பர்கள் நம்பிதாவைச் சந்தித்து பிறந்ததின வாழ்த்தும், அன்பளிப்புகளும் அளித்தனர். பிற்பகல் 6-00 மணியளவில் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கான நவநாள் நிகழ்ச்சிகள் தூய ஆவியானவர் கீதம், சிலுவைப்பாதை, திவ்வியபலி பூசை என்ற தலைப்புகளின்கீழ் நிறைவேறின. யாவரும் இவ் ஆராதனைகளிற் கலந்து பொதுச்சங்கத்துக்காகவும், தங்கள் ஞானத்தந்தையர்க்காகவும் வேண்டிக்கொண்டனர். நம் ஞானப்பிதா பல்லாண்டு நம்மிடையே வாழ்ந்து நம்பதி, நம்நாடு சிறக்க நற்தொண்டாற்ற வல்லதேவன் வழிவகுப்பாராக.

* * *

தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதா தேவாலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு, மட்டுநகரில் கீர்த்திபெற்று விளங்கும், போர்த்துக்காலிலே பாத்திமா என்னும் சிற்றூரிலே காட்டுப்புறமாய் மந்தை மேய்த்து நின்ற லூசியா, யசிந்தா, பிரான்சிஸ் என்னும் பிள்ளைகட்குத் தரிசனம் கொடுத்து, உலகில் சமாதானமுண்டாகத் திருச்செபமாலையை ஓதுங்கள் என்று கேட்டுக்கொண்ட பாத்திமா அன்னை குடிகொண்டெழுந்தருளியிருக்கும் பாத்திமாநாயகியின் 7-வது ஆண்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்வாண்டு இவ்விழாவுக்குமுன் ஒரு வாரகாலமாகத் தினமும் மாலை 6மணிக்குச் செபமாலை, பிரார்த்தனை திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் நடந்தேறியது. அன்று முதல்நாள் சனிவாரம் "பாத்திமாகிரியும்" முன்மைதானமும் மாதாவின் வர்ணங்களாகிய நீல, வெள்ளைக் கொடிகளாலும், குருத்துக்களாலும், மின்சார விளக்குகளாலும் திரு. எம். பீ. எஸ். சிங்கநாயகம் கோஷ்டியினரால் வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாலை 6-30 மணிக்கு பாத்திமா அன்னையின் திருச்சுரூபத்தை இயற்கை மலர்களிடையே அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த ஆசனத்தில் வைத்து மோட்டார் வண்டிமேல் ஏற்றிச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமானது. சுற்றுப்பிரகாரவேளையில் மாதாவின் பிள்ளைகளாகிய பரிசுத்த மாசில்லாத மாதா பக்திச்சபைக் கன்னியர்களால் தேவதாயை வாழ்த்தி வாழ்த்துக்கீதங்கள் பாடப்பட்டது. ஒவ்வோர் சந்திகளிலும் முழக்தாட்படியிட்டு உலக சமாதானத்துக்காக விசேஷ செபங்கள் சொல்லப்பட்டது.

சுற்றுப்பிரகாரம் பாத்திமாகிரி மைதானத்தை வந்தடைந்ததும் அர்ச். மிக்கேல்கல்லூரி அதிபர் சுவாமி வண. வி. ஞானப்பிரகாசம் அவர்களால் பிரசங்கம் சொல்லப்பட்டு, அதி வண. ஜேரோம் டீசா சுவாமி அவர்களால் மாலையாராதனையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது.

திருநாள்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை, கட்டளைக்குரு வண. ஜோர்ஜ ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்களால் திருநாள்பூசை பாடற்பூசையாக நிறைவேற்றப்பட்டு, திருச்சுரூப ஆசீர்வாதமும் அருளப்பட்டது.

—நிருபர்.

## மாத்தளை

மாத்தளைப் பங்கைச்சேர்ந்த வாட்டன் தேயிலைத்தோட்டவாசிகளான கத்தோலிக்க பெற்றோரின் மக்கள் அறுவர் 5-10-62-இல் புதுநன்மைபெறும் பாக்கியம் பெற்றனர். பங்குக் குரவரான அதிவண. ஏ. லூசியன் பெரோரா சுவாமியவர்கள் சென்ற முதல் வெள்ளியன்று பிற்பகல் $4\frac{1}{2}$ மணியளவில் அத்தேயிலைத்தோட்டத்துக்குச் சென்று அங்கே காத்திருந்த சனங்களுக்கும், புதுநன்மைக்கு ஆயத்தமாயிருந்த சிறுவருக்கும் பாவசங்கீர்த்தனம் கொடுக்லானுர். பிற்பகல் 6-30 மணியளவில் பூசைக்கென சகலரும் சிற்றாலயத்தில் ஒருங்குகூடினர். சங். சகோதரர் டபிள்யு. ஜே. பீற்றர், பங்குக்குரவரின் அனுமதியின்பேரில் சிறந்த தமிழில் தெள்ளியநடையில் புதுநன்மை பெறுவோர் செய்யவேண்டிய ஆயத்தம்பற்றியும், அதனாலடையும் பலன்கள்பற்றியும், புதுநன்மைபெற்றபின் அவர்கள் சீவியகாலத்தில் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கமுறைகள் பற்றியும் சுருக்கமாக விளக்கலானுர். பின்னர் கூடியிருந்த சனங்களுக்குத் திருஇருதயப்பக்தியின் நோக்கம்பற்றியும், அதன் அனுசரணைபற்றியும், அத்தாலடையும் அபரிமிதமான பலன்கள் பற்றியும் தெளிவாய் விளக்கிப் பிரசங்கிக்கலானுர். இது முடிந்ததும் திவ்விய பலிப்பூசை ஆரம்பமானது. **நம் பலி** என்ற புத்தகத்திலுள்ள செபங்களும் பாடல்களும் அத்தோட்ட மக்களாலேயே பாடப்பட்டன.

பூசையின்போது பெரும்பாலானேர் தெய்விகவிருந்தருந்தினர். பூசை முடிந்ததும் புதுநன்மைச் சிறுரின் ஞானஸ்நான வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்பட்டது. இது முடிந்தவுடன் புதுநன்மைபெற்ற சிறுவர் பங்குக்குருவானவரை வரவேற்று வந்தனேபசார வாழ்த்துப்பத்திரம் வாசித்து நன்றியறிதல் ஞாபகமாய் அவர்கள் தகுதிக்கேற்ற வெகுமதியொன்றும் வழங்கலானுர்கள். பின்னர் குருவானவர் நன்றிகூறி அவர்களுக்கு ஞாபகச்சின்னங்கள் அளித்து ஆசீர்வதிக்கலானுர்.

கடைசியாய் புதுநன்மை பெற்றவர்களுக்கும், பூசையில் பங்குபற்றிய சகலருக்கும் வெகு பரிமளிப்பான சிறந்தவிருந்துபசாரனை ஒன்று அளிக்கப்பட்டு வைபவம் இனிது சமாப்தியாயிற்று.

—நிருபர்.

## தேற்ருத்தீவு

இயற்கை அன்னையின் எழில்சூழ்பரந்த மணற் பரப்பிலேயமைந்தது இப்புனித சேத்திரம், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராக, அடைக்கலம் புகுவோர்க்கு அருள் சுரக்கும் இன்பஊற்ருக அமைந்து, இங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். யூதா ததேயுவின் மகிமையை இன்று உணராதார் யாருமில்லை. மண்ணுயிர்க்காய்த் தன்னுயிரைத் தியாகம்செய்த அருள்ஜோதி யேசுபிரானின்குலத்திலே அவதரித்து, பன்னிரு அப்போஸ்தலர்களுள் ஒருவராக இருந்து, சத்திய ஞானமறையைப் பரப்பி, தன்னுயிரையே தியாகம் செய்து வேதசாட்சியாக மரித்த மாபெரும் அற்புதர்தான் நம் அர்ச். யூதா ததேயு.

எம்பிரானைக் காட்டிக் கொடுத்த துரோகியாம் யூதாஸ் காரியோத்துவின் நாமமும் இவர்நாமமும் ஒன்றேபோன்று இருந்ததால், இவ்விரண்டாயிரவருட காலமாக இவர்புகழ் மங்கிக் கிடந்தது. ஆனுல், இன்ருே அதற்கு மாருக, அவர் புகழும் புரியும் அற்புதங்களும் மின்வேகத்திற் பரவிக்கொண்டிருக்கிறது.

பல வருடங்களாக இப்பகுதியில் வாழும் கத்தோலிக்கமக்கள், கோயிலின்றி, மாங்காட்டுப் பாடசாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமொருமுறை பூசைவைப்பித்து இறைவனை வழிபட்டனர். பாடசாலை அரசினரால் எடுக்கப்பட்டபின் இக்கட்டானநிலை ஏற்பட்டது. இதனால் மனமுடைந்த இவர்கள் அர்ச். யூதா ததேயுவின் அருள்வேண்டி 28-10-60-இல் மேற்படி பாடசாலையில் ஓர் விசேடஆராதனை நடத்தினர். நிலம் கிடைப்பதே முயற்கொம்பாக இருந்த இவர்களுக்கு ஏறக்குறைய 10ஏக்கர் நிலம் கிடைத்ததுமன்றி, ஒருவருடகால எல்லைக்குள் கோயில் அமைக்கவும் ஏற்றவசதிகள் கிடைத்தன. அப்படியாக அமைந்த இக்கோயில் மட்டக்களப்பு—கல்முனை பிரதான வீதியில் 13-ம்கல்லில் அமைந்துள்ளது.

புதிதாய் அமைந்த இக்கோயிலில் வெள்ளிக்கிழமைகள்தோறும் பி. ப. 4-30மணிக்கு பக்தர்களின்கருத்துகளுக்காகச் செபமாலை, நவநாள்ஆராதனை, பூசைப்பலி என்பன ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

இன்று இச்சேத்திரத்தின் புகழ் இவ்வளவு விரைவாக இலங்கைமுழுவதும் பரவிவிட்டதென்றால் அப்புகழ் இவ் அர்ச்சியசிஷ்டரையே சாரும். கொழும்பு, கண்டி, காலி, சிலாபம், புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து கிழமைதோறும் வந்துகுவியும் விண்ணப்பங்களே இதற்குச் சான்றுபகரும். ஏன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நூற்றுக்கணக்கில் வந்துகூடி ஆராதனையில் கலந்துகொள்ளும் பக்தர்களின் தொகை கூடிக்கொண்டே போகிறதென்றால் இச்சேத்திரத்தின் புகழ்கூறவும் வேண்டுமோ? இதற்காக இ. போ. சபை விசேடபஸ்சேவையும் வெள்ளிக்கிழமையில் ஒழுங்கு செய்துள்ளது.

அர்ச். யூதா ததேயுவின் திருநாள் ஐப்பசிமாதம் 28-ம் திகதியாகும். அதே திகதியில் கிறிஸ்து இராசா திருநாளும் வருகிறபடியால் அடுத்த ஞாயிறு 4-11-62-இல் இவரின் திருநாள் கொண்டாடப்படும். இக்கொண்டாட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்துவரும் குடும்பங்களுக்கு 100 இல்லிடங்கள் அமைக்கப்படுகிறது. தேவையானோர் பங்குக் குருவருக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். நவநாள் ஆராதனை ஒவ்வொருநாளும் பி. ப. 4-30மணிக்கு 27-10-62 தொடக்கம் நடைபெறும்.

கிழ்மாகாணத்திலே பிரபல்யமான ஒரு யாத்திரைத் தலமாக மாறிக்கொண்டுவரும், இப்புனித சேத்திரத்தைத் தரிசித்து, இவ் அற்புதரின் அருளைப் பெறுவோமாக. இவரின் புகழைப் பெறவும், பரப்பவும் நினைப்போர் இலவச விண்ணப்பங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

அர்ச். யூதாததேயுவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**விலாசம்**

பங்குக்குரவர்,
அர்ச். யூதா ததேயு சேத்திரம்,
தேற்றாத்தீவு,
களுவாஞ்சிகுடி P. O.

## ● ராகலை

ராகலைப் பங்கைச் சேர்ந்த மாவாதோட்டமென்னும் இடத்தில் அர்ச். வனத்துச் சின்னப்பரின் திருநாள் வெகு ஆரவாரமாக, 16-9-62-இல் கொண்டாடப்பட்டது. அன்று சாயந்தரம் கட்டளைக்குரவர் வண. சூசைப்பிள்ளை சுவாமியார் அவர்களைப் பூமாலை உபசரணையோடு எல்லோரும் வரவேற்று, அர்ச். வனத்துச் சின்னப்பர் நாமத்தால் திருச்சிலுவை ஸ்தாபிக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சுற்றுப் பிரகாரமாய் அழைத்துச் சென்றனர். அந்த இடம் தேயிலைத்தோட்டத்தின் பச்சைப்பசேரென்ற ஒருபகுதியில் ஒரு சிறு மலைக்குன்றின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அங்கு சென்றதும் வண. சுவாமியவர்கள் திருச்சிலுவை நாதரை ஆசீர்வதித்தார். அதன்பின் சமயபேதமின்றி யாவரும் ஒன்று சேர்ந்து தானத்திற்குத் தயாரித்திருந்த போசன பதார்த்தங்களை ஆசீர்வதித்தார். அதன்மேல் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திருநாள் முடிவாயது.

—நிருபர்.

## ● நீர்கொழும்பு

**"சந்நீக்குலாதீவு"** என்ற காரணச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் முன்னக்கரைச் சிறுதீவின் தென் அந்தத்தில், 1935-ம்ஆண்டு புரட்டாசி மாதம் 29-ந்திகதி ஸ்தாபிக்கப்பட்ட திருச்சிலுவை ஒன்று உண்டு. அன்று தொடங்கி இற்றைவரைக்கும், அத்திருச்சிலுவை வைக்கப்பட்ட இடம் 'குருசுக்கோவில்' என்று அழைக்கப்பட்டு அயல் ஊர்களில் உள்ள கிறிஸ்தவ மக்களாலும், ஊர்மக்களாலும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிறு யாத்திரையாகச் தரிசிக்கப்பட்டுவருகின்றது. இக்"குருசுக்கோவில்" பெருநாள், திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள் புரட்டாசிமாதம் 14-ந்திகதிக்கு அடுத்த ஞாயிறு கொண்டாடப்படும். சென்றமாதம் 16-ந்திகதி பெரியதெரு, அர்ச். அற்புதநாயகி தேவாலயத்திலிருந்து மாலை 4மணிக்கு தபச்சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயது. அதிவண. எஸ். பெர்னாந்துப்பிள்ளை, O. M. I. சுவாமியார் உண்மையான திருச்சிலுவைப் பண்டத்தைக் கையில் ஏந்திச்செல்ல, கொழும்புத்துறை "அமலஉற்பவ இல்ல" போதக குருக்களுள் ஒருவராகிய வண. அல்பிறேட், O. M. I. சுவாமியார் அவர்கள் தவப்பவனியின் பொறுப்பாளராக, செபங்கள், கீதங்கள் பாடித் தவப்போக்கை ஒலிபெருக்கி மூலம் நடாத்தினர். புண்ணிய ஸ்தலத்தைக்கிட்ட திருச்சிலுவைப்பாதை சொல்லப்பட்டு, புதிய குரவரான வண. சிஸ்டஸ் பெர்னாந்து சுவாமி அவர்களால் திவ்விய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட வண. அல்பிறேட் சுவாமி அவர்கள் ஒரு பிரசங்கம் செய்தனர். அந்நேரம் அங்கு சமூகமாக இருந்தோர் சுமார் ஐயாயிரம் பேராவர்.

வண. குளோட் லோறன்ஸ், O. M. I. சுவாமி அவர்கள், பெரியதெரு மீசாமில் உதவிக் குரவராய் இருந்தகாலத்தில், சகுன சாஸ்திரம் முதலிய பேயின் மாயவித்தைகளை அழிக்க, சிலர் பேயாட்டிக்கொண்டிருந்த அந்த இடத்தில் ஒரு சிலுவையைக் கையால் நிலத்தில் வரைந்து, பின் தம்கட்டளைக் குருவானவரின் உத்தரவோடு, 1935-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 29-ந்திகதி அதிதூதரான அர்ச். மிக்கேல் தினத்தன்று இத்திருச்சிலுவையை அங்கு நாட்டி, கஷ்டதுன்ப துயர காலத்திலும், வறுமையிலும், மரணத்தில்தானும், திருச்சிலுவையின் தஞ்சத்தை அடையவும், திவ்விய இரட்சகரின் திருப்பாடுகளைத் தியானிக்கவும், அத்திருப்பாடுகளின் பலன்களை நாம் நமது சீவியத்தில் அனுபவிக்கவும், திருச்சிலுவையைச்சீவிக்கவும், அதை நேசிக்கவும், அது எம்மை அணுகும் பொழுதும், அண்டும்பொழுதும் எமது திவ்விய இரட்சகரைக் கண்டு பாவித்து, அதை அன்புடன் கட்டி அரவணைக்கவும், அதனால் கிறிஸ்தவர்கள் என்ற நமது நாமத்துக்கு யோக்கியமுள்ள மக்களாய்ச் சீவிக்கவும், இச்சிலுவையை அங்கு ஒரு சிறுகூடத்தில் வைத்து நிறுத்தினார். இத்திருச்சிலுவைச் சம்மனசு சுவாமியார் என்னப்படும் வர். விஸ்திரீனி ஆண்டவர் வைத்திருந்த சிலுவை என்று சொல்லப்படுகின்றது.

வண. குளோட் சுவாமியவர்கள் தூரதிருஷ்[illegible] இந்தச் சிறு[illegible] களில் வேரிட்டு, முளைபிட்டு, தளைத்து

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# உள்நாட்டுச் செய்திகள்

### பாடசாலையில் சேரும் பிள்ளைகள்

வித்தியாதிபர்விடுத்துள்ள ஓர் அறிக்கையின்படி, வகுப்புக்குரியவயதிற்கு மேற்பட்டவயதுள்ள எந்தப்பிள்ளையாவது முதன்முறையாகப் பாலர்கீழ்ப்பிரிவில்சேர அனுமதி கேட்கும்போது கூடியவயதுகாரணமாக எந்தச்சந்தர்ப்பத்திலும் அப்பிள்ளையை அனுமதிக்க மறுக்கப்படாது. பாடசாலையில்சேர ஒருபிள்ளையின் ஆகக்குறைந்த வயது 1963-ம்ஆண்டு தைமாதம் 1-ந்திகதியன்று 4வருடம் 9மாதமாக இருக்க வேண்டும். பிரதேசப் பாடசாலைகளிலே ஆரம்பவகுப்புகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்விஷயமாய்ப் பாடசாலைக்கு அதிகம்சமீபத்திலுள்ள பிள்ளைகளின் கல்வித்தரம் எவ்வாறிருந்தாலும் அவர்களுக்கே முதன்மைஅளிக்கவேண்டும். அவர்களுக்கு எவ்விதபரீட்சையையும் நடத்தவேண்டிய அவசியமில்லை.

### முன்னாள் நிதிமந்திரி

இலங்கை அரசியல்வானிலே கடந்த ஈராண்டுகளாக அதிகம் உயர்ந்தபதவி வகித்திருந்த முன்னாள் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சென்றவாரத்தொடக்கம் முன்போல வழக்கறிஞராகத் தொழில்பார்க்கத் தொடங்கியிருக்கிறார். சமீபத்திலே தனது உதவிமந்திரிபதவியையும் இராசிநாமாச் செய்ததைத்தொடர்ந்து கொள்ளுப்பிட்டியிலுள்ள அவர்மனையிலிருந்து வந்த பொலிஸ்பாதுகாப்பும் அகற்றப்பட்டுவிட்டது.

### மன்னாரும் உப்புவிளைவும்

இலங்கையிலே உப்புவிளையும் பகுதிகளில்ஒன்றான மன்னாரிலே இவ்வருடம் அமோகமாக உப்புவிளைந்திருக்கிறது. உப்புத் தட்டுப்பாடாதநிலையில் மன்னார் எப்போதுமே இருந்தபோதிலும் இம்முறை ஏராளமாக விளைந்திருக்கும் உப்பு மன்னார்மாவட்ட மக்களின் தேவைக்குக் கண்டு இலங்கையின் ஏனையபகுதிகளுக்கும் அனுப்பிவைக்கக் கூடியநிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### உபஉணவுப் பொருட்கள்

செத்தல்மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம், பயறுவகைகள் போலும் உபஉணவுப்பொருட்களின் இறக்குமதி வருடந்தோறும் அதிகரிப்பதைத் தடுத்து அதைப் படிப்படியாகக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உள்நாட்டிலே இவைகளை உற்பத்திசெய்ய ஊக்கமளித்து, வெளிநாட்டுச் செலாவணியைப் பெருமளவில் மிச்சப்படுத்த வேண்டுமென்று தேசியதிட்டப்பகுதி செய்தசிபாரிசுகளின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஓர் இடைக்கால நடவடிக்கையாக இவற்றின் இறக்குமதியைப் பத்துச்சதவீதம் குறைக்க வேண்டுமென்பதும் இந்தச்சிபாரிசுகளில் ஒன்றாகும்.

### பிரதிநிதிகள் சபையில் பிரதமர்

பிரதமர் சிறிமாவோ சனப்பிரதிநிதிகள்சபையில் ஓர் அங்கத்தவராய்இருக்க வேண்டுமெனக்கோரும் பிரேரணை ஒன்றைப் பாராளுமன்ற அரசாங்ககட்சிக் குழுவின் விவாதத்திற்கு மாவனல்லை எம். பி. திரு. பி. ஆர். இரத்நாயக்கா கொண்டுவரவிருக்கின்றார். நியமன எம். பி. ஒருவரை அகற்றிவிட்டு அவரதுஇடம் பிரதமருக்குக் கொடுபடவேண்டும்; அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு அவரே பதிலளிக்க வேண்டும்; சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்[illegible]முறைப்படி ஒழுங்காக [illegible]செய்யவேண்டும்; அதனால் பிரதமர் சபையில் இருக்கவேண்டுமென்று அப்பிரேரணை கூறுகின்றது.

### ஐந்தாம்வகுப்புப் பரீட்சை

வட இலங்கைத் தமிழாசிரியர்சங்கம் வழமைபோல இவ்வருடமும் வடமாகாண ஆசிரியர்சங்கத்துடன் ஒன்று சேர்ந்து ஐந்தாம்வகுப்புப் பரீட்சையை நடத்தத் தீர்மானித்துள்ளது. இப்பரீட்சை வருகிறகார்த்திகைமாதம் 24-ந்திகதி சனிக்கிழமையன்று வடபகுதியிலே 122ஸ்தானங்களில் நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 15-ந்திகதிவரை பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பரீட்சார்த்தமாகப் பீடிப்புகையிலை

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்அவர்கள் முல்லைத்தீவிலுள்ள தமதுகமத்திலே பரீட்சார்த்தமாகப் பீடிப்புகையிலையைப் பெருவாரியாகச் செய்கைபண்ணுவதில் ஈடுபட்டிருக்கின்றார். பீடிப்புகையிலையுடன் அவருடையகமத்தில் வாழை, வெங்காயம் போன்றபயிர்களும் செய்கைபண்ணப் படுகின்றன. பரீட்சார்த்தமாக நடைபெற்றுவரும் பீடிப்புகையிலைச்செய்கை வெற்றியளிக்குமானால் அதனைப்பலரும் கையாளச் செய்யும்வகையில் ஊக்கமளிக்க அவர் உத்தேசித்திருக்கின்றார்.

### தமிழரும் சுபீட்சவாழ்வும்

வேலணைப் புதியசந்தைத் திறப்புவிழா சென்ற 2-ந்திகதிநடைபெற்று, அதிலே ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் பேசியபோது: "இன்றுள்ளநிலைமையில் நமது சுயதேவைகளை நாமேபூர்த்திசெய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முயலவேண்டும்; முக்கியமாகத் தமிழ்பேசும்மக்கள் இந்நாட்டில் சுபீட்சமாக வாழவேண்டுமானால் அவர்கள் போலிக்கௌரவங்களை உதறித்தள்ளிவிட்டுக் கைத்தொழில், கமத்தொழில், கடற்தொழில் ஆகியவற்றிலே ஈடுபடவேண்டும்" எனக் கூறியிருக்கின்றார்.

### புரட்சிச்சதி வழக்கு

நீதியரசர்களான திரு. ரி. எஸ். பெர்னாண்டோ, திரு. பி. ஸ்ரீகந்தராசா, திரு. எல். பி. டி சில்வாஎனும் மூவரையும்கொண்ட நீதிமன்றத்திற்குப் புரட்சிச் சதிவழக்கை விசாரணைசெய்யும் அதிகாரம் கிடையாதெனச் சென்ற 3-ந்திகதியன்று நீதியரசர் ரி. எஸ். பெர்னாண்டோ தீர்ப்பளிக்கலாயினர். இதற்குரிய முக்கியகாரணங்களில் ஒன்று, நீதியரசர்களை நீதிமந்திரி தெரிவுசெய்தமையே. இந்தத்தீர்ப்பினால் புரட்சிச் சதிவழக்குச்சம்பந்தமாய்ப் பிஸ்கால் காவலில் இருந்துவந்த சந்தேகப்பேர்வழிகள் 24பேரும் திரும்பவும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஆயினும் இவர்களை அவர்களின் இனபந்துக்கள்போய்ப் பார்த்துச்செல்லப் பாதுகாப்பு மந்திரிகாரியாலயம் எவ்விதகட்டுப்பாடும் விதிக்காதென்றும், விளக்கமறியலிலே இவர்களுக்கு அருளப்பட்ட சலுகைகளில் எவ்விதமாற்றமும் செய்யப்படமாட்டாதென்றும் தெரியவருகிறது.

### ஆகாயத்தில் விளம்பரம்

இலங்கையின் ஆகாயவெளியிலே விரைவில் பல்வகை விளம்பரங்களும் காட்சியளிக்க விருக்கின்றன. இந்த விளம்பரங்கள் ஆகாயவிமானத்தில் சென்று ஆகாயத்திலே செய்யப்படும். இந்தப் புதுமுறையான விளம்பரத்தைக்கையாள எயர்சிலோன் ஜெனரல்மனேஜர் தீர்மானித்திருக்கிறார். இந்த ஆகாயவிளம்பரத் திட்டம் வருகிற மார்கழியிலே ஆரம்பமாகவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஐப்பசி**

| | | | |
|---|---|---|---|
| 14 | ஞா. | இஸ். ஆக. பின் 18-ம் ஞாயிறு | [ப] |
| 15 | தி. | அர்ச். அவிலா தெரேசம்மாள் | [வெ] |
| 16 | செ. | அர்ச். எட்வீசம்மாள் | [வெ] |
| 17 | பு. | அர்ச். மார்கரீத்மரியா அலக்கொக் அம்மாள் | [வெ] |
| 18 | வி. | அர்ச். லூக்காஸ் (வி. ம.) | [சி] |
| 19 | வெ. | அர்ச். அல்காந்தரா இராயப்பர் | [வெ] |
| 20 | ச. | அர்ச். கான்சியுஸ் அருளப்பர். | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1962-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந் திகதி**


## கவலைதோய்ந்த கடிதம்

எனது இன்றைய நிலையைத் தங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்க ஆசிக்கிறேன். கடந்த சிலமாதங்களாக இவ்விசாரணைப்பங்கின் நிதி நிலைமை மோசமாகிக்கொண்டே வருகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்தில் கிடைக்கும் தண்டல் பணம் 35 சதங்களுக்கு அதிகமாவதில்லை. கடந்த வைகாசிமாதத்திலிருந்து இதுவரை இரண்டு ஞானஸ்நானங்களையே நிறைவேற்றினேன். இதன்மூலம் கிடைத்த தொகை 3 ரூபா 50 சதம் மட்டுமே.

ஒரு திருமணம் நிறைவேற்றப்பட்டது. ஆயின் எளிமைமிகுந்த குடும்பங்களிடையே நடைபெற்ற அத்திருமணச்சடங்குக்காக எதையுமே எதிர்பார்த்தல் இயலாத கருமம். எனவே, அன்புக்குரிய தந்தையே எனது விசாரணைப்பங்கின் நிலையைச் சற்று நோக்குங்கள்.

எங்கள் பாடசாலையைத் திறமையுடன் நிர்வகிப்பதற்காக வருடம் ஆயிரம் ரூபாவாவது செலவிட வேண்டியுள்ளது. இங்கு 45 கத்தோலிக்க குழந்தைகள் கல்விபெறுகின்றார்கள். இப்பாடசாலை ஆசிரியர்கட்கு மாதவேதனமாக 1125 ரூபாய்கள் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் இரு வேதப்பரப்புதல் ஆசிரியர்கட்கும் தனித்தனி 95 ரூபாய்களைக் கொடுக்கவேண்டும்.

லூபா பகுதி முழுவதிற்காகவும் ஒரேயொரு உபதேசியார்மட்டுமே உண்டு. என்னுடைய மாதாந்த வேதனமான 375 ரூபாக்களிலிருந்து மேற்கூறிய செலவுகளனைத்தையும் அத்துடன் எனது உணவு, உடை மற்றும் சௌகரியங்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

எனது சொந்தக் கருமங்கள்பற்றியும் சில வார்த்தைகள் குறிப்பிடுதல் வேண்டும். மிகக் கட்டுப்பாடாகவும், சிக்கனமாகவும் எனது வாழ்க்கையை நடாத்துவதுடன் கூடியளவு எனது செலவுகளைக் குறைத்துக்கொள்ள முயல்கிறேன். இல்லையேல் மேற்கூறிய செலவுகளைச் சமாளிப்பது பெரும் கஷ்டமாகிவிடும்.

மலிவான சாடின்மீன்களை மட்டுமே உபயோகிக்கிறேன். காலையில் காப்பியருந்துவதை நிறுத்திவிட்டேன். பானங்களுடன் பால் சேர்த்துக்கொள்வதைத் தவிர்த்து நாலுமாதங்களாகின்றன. சில தருணங்களில் காலையாகாரமும் முற்றுகத் தவிர்க்கப்படுகின்றது. எடுபிடி வேலைகட்காக வைத்திருந்த பையனையும் நிறுத்தவேண்டியதாயிற்று.

எனது இரு குதிரைகட்காகவும் அதிகம் செலவழிக்க முடியாதிருக்கிறது. எங்கள் மாதாந்தக் கூட்டங்கட்காக யான் பிரயாணம் செய்யும்போது மற்றவர்கள் செய்வதுபோல எனது பாதுகாப்புக்காக ஒருவரை அமர்த்திக்கொள்ள இப்பங்கின் நிலைமை இடந்தராது. எனது கிழட்டுக் குதிரைகளும் உணவின்றி வருந்தும்நிலை விரைவாக ஏற்படலாமென எண்ணுகிறேன்.

திருவார்த்தையின் பரித்தியாகர்களிலொருவரான வண. பெலிப்பி புளோர்ஸ் அடிகள் புதுவேத நாடுகளிலொன்றிலிருந்து தனது சிரேஷ்ட குரவரிடம் உதவிகோரியனுப்பிய லிகிதம் இது. இவர் போன்ற பரித்தியாகிகள் பலரின் தன்னலமற்ற தொண்டுகளால் மட்டுமே எங்கள் இலங்கைநாட்டிலும் அன்று வேதவிசுவாசம் வித்திடப்பட்டது. அவர்களின் அன்றைய பெருமுயற்சிகள் இன்று இங்கு சிறந்தமுறையில் இரட்சணிய அலுவலைச் செய்துமுடிக்க உதவுகிறது.

புதுவேத நாடுகளின் இரட்சணிய அலுவலுக்கு உதவுவதற்கென ஒரு ஞாயிறு உண்டு. விசுவாசபரப்புதல் ஞாயிறு என அது அழைக்கப்படுகிறது. கட்டளைக்குரவர் கையிலேந்திய தட்டுடன் எம்மை நோக்கி வருகிறார். அன்றைய பரித்தியாகர்களின் முயற்சிகளால் கத்தோலிக்கத்தில் திளைக்கும் எமது நிலையை எண்ணிக்கொள்வோம். இன்றும் அதேமுயற்சிகளில் புதுவேதநாடுகளில் உழைக்கும் மேற்கூறியவர்கள்போன்ற மிஷனரிகளின் நிலைமையை உணர்வோம்.

நிதிநிறைந்தவர் பொற்குவையளிப்போம் இல்லையேல் செப்புக் காசுகளையாவது தருவோம்.

---

இலங்கை, மரியாயின் சைனிய

## கால்நூற்றாண்டு விழா

சில்லாலை

புனித மரியன்னை ஆலயத்தில்

**14-10-62 ஞாயிற்றுக்கிழமை**

**இளவாலைக் கியூறியாவின் ஆதரவில் நடைபெறும்.**

நிகழ்ச்சி நிரல்

காலை 8-00 திவ்வியபூசை.
9-00 ஆரம்ப செபமும், செபமாலையும்.
ஆரம்ப வைபவம்.
கண்காட்சியைத் திறந்துவைத்தல்.
10-30 கலந்துரையாடல் I.
பொருள்: சேனையாளனின் குணதிசயங்கள்.
12-30 மதிய போசனம்.
மாலை 2-00 கலந்துரையாடல் II.
பொருள்: வேலைத் திட்டம்.
4-00 தேநீர் ஓய்வு.
4-30 சேனையாளர் ஊர்வலம்.
வார்த்தைப்பாடு புதுப்பித்தல்,
சற்பிரசாத ஆசீர்வாதம்,
முடிவு செபங்கள்.

**சேனையாளரும், ஆதரவாளரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

**இளவாலைக் கியூறியாத் தலைவர்.**

இளவாலை, 10-10-62.

---

# சுதந்திர உகண்டாவில்

ஐப்பசி 9-ம் நாள் அரசியற் சுதந்திரம்பெற்ற உகண்டா ஏழு ஆண்டுகளுக்குமுன் மதமுதிர்ச்சிபெற்றது. இரண்டிற்கும் அடிகோலியது திருச்சபையே.

"உகண்டா ஒரு கற்பனைக்கதை நாடு; புகையிரதத்தில்ஏறி அதன் அந்தத்தில் இறங்கினல் அற்புதமான புதிய நாடொன்றைக் காணுவோம்," என உவின்ஸ்ரன் சேர்ச்சில் 1908-இல் எழுதினர். இந்நாட்டில் வேதப்பரப்புதல் ஊழியஞ்செய்த எந்தக்குருவானவரும் இக்கூற்று உண்மைஎன ஒப்புவர். ஆபிரிக்காவின் இப்பகுதியை "மிஷன் நாடுகளின் முத்து" என்றுர் 11-ம் பத்திநாதர். 13-ம் சிங்கராயரும், கருதினல் லவிஜெறியும் இம்முத்தைத் திருச்சபையின் கருவூலத்துட் சேர்க்க அரும்பாடு பட்டனர்.

### ஊர் ஆராய்வு

உவைற் பாதர்ஸ் (White Fathers) எனப்படும் வேதப்பரம்புதற் சந்நியாசசபையை ஆபிரிக்காவில் அடியிட்ட கருதினல் லவிஜெறி 1878-ம் ஆ சித்திரை 22-ம் நாள் ஐந்துகுருமாரை உகண்டாவிற்கனுப்பினர். அவ்வாண்டின் மார்கழியில் அவர்கள் தங்கனிக்காவை அடைந்தனர். அவர்கள் கண்களுக்கு எட்டும்வரை விக்ரோறியாவாவி கடல்போற் பரந்து கிடந்தது. அதைக்கடந்தால் உகண்டாவை அடையமுடியும்.

சென்ற குருமாரில் இருவர் "ஊர் ஆராய" அனுப்பப் பட்டனர். வெய்யிலையும், முதலைகள் நிறைந்த வாவியையும் பொருட்படுத்தாது 28 நாட்களாகப் பயணஞ்செய்து அவ்வாவியின் வடகரையை அடைந்தபோது திருச்சபையின் முதற்தூதுவர் உகண்டாவில் அடிவைத்தனர்.

ஆரம்பத்தில் ஆபத்துக்கள் அநேகம். சிலநாட்களின்பின் குருமார் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர். பயணக் கடினம், நோய், மத, அரசியற் சதிமானம் அவர்களை வருத்தின. வேதசாட்சிகளாகினர் ஆதிக்கிறிஸ்தவர்களில் சிலர்.


### ஈரிலைப் பூண்டு

இருமுறை மிஷனறிமார் உகண்டாவிலிருந்து கலைக்கப்பட்டனர். அதனல் தகுந்தகாலத்தை எதிர்பார்த்துக்கொண்டு செபித்தும், பிற ஆயத்தஞ் செய்துமிருந்தனர். காலகதியில் கவலையுடன் விதைத்தவிதை முளைத்து வளரத்தொடங்கியது. றுபகா குன்றில் சிறு குடிசையொன்று கோயிலாக அமைக்கப்பட்டது. பின்பு புக்கலசா, புக்கும்பி, கற்றிடக்கொண்டா ஆதியாம் இடங்களில் வேதவித்து வேர்விட்டுப் பயிராகியது. திருச்சபை வேரூன்றிவிட்டது. எனினும் கிழக்கிலும் வடக்கிலும், கொங்கோ, சூடான், கெனியா, தங்கனிக்கா பிரதேசங்களை எல்லையாகக்கொண்ட பிரதேசம் இன்னும் வேதமணமறியாமற் கிடந்தது. படிப்படியாகச் சிறுதொகையினராக இருந்த கிறிஸ்தவர்கள் நூறுகவும், ஆயிரமாகவும் அதிகரித்தனர்.

ஆண்டுதோறும் இளம் மிஷனறிக் குருமார் வந்தபோதிலும் ஊழியம் மிகுந்தது. எனவே, "உவைற் பாதர்ஸ்" சபையினர் மில்ஹில் (1895), வெரோனு (1910), திருச்சிலுவை (1958)க் குருமாரைத் திருவூழியத்திற்கு உகண்டாவிற்கு வரவேற்றனர். அத்துடன் ஆரம்பத்திலிருந்தே சுதேசக் குருக்களைப் பயிற்ற முயற்சித்தனர். முதற்குருவாக விக்ரோறியோ முகாசா 1913-ல் குருப்பட்டம் பெற்றார். தற்பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்



## திருஇருதயப்பக்தியின் உயர்தொண்டர் அர்ச். மார்கரித்து மேரி அலெக்கொக்

தேதி—ஐப்பசி 17

**தேவன் தேரிந்தேடுத்தார் :**

"யேசுவின் திருஇருதயநேசத்தில் உலககவனத்தைக் கவர்ந்துகொள்வது பிற்காலங்களின் வேலையாகும்" என சுவிசேஷஅருளப்பர் கூறியிருப்பதாக அர்ச். ஜேர்ட்றாட்அம்மாளின் சரித்திரத்தில்வரையப்பட்டிருக்கிறது. இன்று தேவனின்போதனைகள் எங்குபோதிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் யேசுவின் திருஇருதயபக்தியும் விளங்குகின்றது. சென்ற மூன்று நூற்றுண்டுகளுக்குள்ளேயே இப்பக்தி புத்துயிர்பெற்றது. இதற்கென அர்ச். மேரி அலக்கொக்அம்மாளைத் தேவன் தெரிந்துகொண்டார்.

**இளமைப் பராயம் :**

இவர் பிறந்தது 1647-ம்ஆண்டு ஆடி மாதம்22-ந்தேதி. பிறந்தகம் பிரான்சு. இடம், பேர்கண்டிபிரிவிலுள்ள உலாந்திக்கோ என்னும் கிராமம். இவர் தந்தையாரின் பெயர் குளோட் அலக்கொக். அவர் ஒரு நீதிபதி. ஆனால், மேரிக்கு நாலுவயது நடக்கும்போதே அவர் இறந்துவிட்டார். அவர் மரணத்துடன் அவரது குடும்பத்தவருக்குப் பெரும்இன்னல்கள்ஏற்பட்டன. நெருங்கிய இனத்தவன்ஒருவன் இவர்களது ஆஸ்திகளை அபகரித்துப் பலவருடங்களாகத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான். இதனால் மேரியும், அவளது நாலு ஆண்சகோதரச் சிறுவர்களும், அவர்களது அன்னையாரும் இடுக்கணுற்றனர். தேவன துசித்தம் அதுவாயிற்று. ஆனால், அவர்களில் விளங்கிய உண்மைவிசுவாசம இன்னல்கள் யாவற்றையும் புண்ணிய மணிகளாக மாற்றிவிட்டது. மேரி அக்கிராமத்திலுள்ள கன்னியர்மடத்தில் கல்விகற்று, பரிசுத்தத்திலும், புண்ணியத்திலும் வளர்ந்துவந்தாள். தேவனின் நேசத்துக்கு நன்றியாகத் தனதுகற்பை அவருக்கு அச்சிறுபராயத்திலேயே யாவருமறியாது ஒப்புக்கொடுத்து விட்டாள். இது அவள் தனது தேவனுடன்செய்துகொண்ட நேசஒப்பந்தமாகும். இந்த நேசச்சிறுமியுடன் யேசுநாதர் இடையிடையே நேரிற் சம்பாஷித்ததுண்டு. ஒப்பந்தத்தின்படியே மேரிதனது 24-ம் வயதில் பறேஎன்னும் இடத்தில்இருந்த "விசிட்டேஷன்" சபைத்துறவியாகச் சேர்ந்துகொண்டாள்.

**துறவற மனை :**

இக்கன்னியர்மன்றத்தில் இருந்த சிலபுண்ணிய குறைபாடுகள் மேரியின் வழியாகநீக்கத் தேவன்சித்தமானார். இவளில்இருந்த சிலகுணமேம்பாடு,சில கன்னியர்களின்மனதில் பொறுமையை எழுப்பிவிட்டது. யேசுவின் திருப்பாடுகளிலும், சற்பிரசாத பரமஇரகசியத்திலும் படிந்திருந்த இவளது பரிசுத்தமன மானது விந்தையாகவும், வேஷமாகவும் சிலருக்குத் தோன்றியது. இந்நிந்தனைகள் மனவேதனையை அளித்தபொழுதிலும் தாழ்ச்சியாலும், ஒறுத்தலாலும் தன்னைப் பரிசுத்தப்படுத்தும் வழிகளாகக் கையாளப்பெற்றன. யேசுநாதர் இவளுடன் உண்மையாகவே சல்லாபித்துவந்த உண்மையை அம்மடக்கன்னியர்கள் ஐயந்திரிபற அறியவந்ததும், தமது மடமைக்கு வருந்திப் பிழைகளைத் திருத்திக்கொண்டனர். மடமும் தூய்மையுற்றது.

**யேசுவின் ஆணை :**

ஒருநாள் மேரி வழமைபோல் சற்பிரசாதத்தின்முன் ஆழ்ந்தநேசத்தில்மூழ்கியிருந்தசமயம் "இதோ! மனிதர்மேல் உள்ள நேசமானது நிரம்பிவழியும் என் இருதயம். அந்நேசத்தை உன்மூலம் உலகில்பரப்ப எண்ணியுள்ளேன்" என்றூர் திவ்வியகர்த்தர். மேரி திகைப்படைந்தாள். தான் கண்டதையும், கேட்டதையும் சிரேஷ்டகன்னியருக்கு அறிவித்தாள். ஆனால், அவர்கள் யாது செய்வதெனத்தெரியாது இருந்தனர். ஒருமுறையுடன் நின்றுவிடாது பல முறைகளிலும்யேசுநாதர் தமது திருச்சித்தத்தை மேரிக்கு அறிவித்தார். அவளது ஆத்தும குருவானவராகிய வண. கொலம்பியேசுவாமியார் முறைப்படி செய்யவேண்டியனவற்றைச் செய்தார். மேரியை நன்கு பரிசோதனை செய்து, யாவும் உண்மையெனக்கண்டு தான் சென்றஇடமெங்கும் இச்செய்தியைப்பரப்பத் தன்னால் இயன்றளவும் முயற்சிசெய்துவந்தார். இங்கிலாந்திலும், பிரான்சிலும் திருஇருதயபக்தி விரைவில் பரவிவர இவரது முயற்சியே பிரதான காரணமாகும். பறேகன்னியர் மடமும் மகிமைபெற்றது. குறைபாடு மிக்கதம்மை இவ்வாறு மகிமைப்படுத்திய தேவனுக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாக விளங்கவேண்டுமென்ற எண்ணமே அம்மடத்தோரின் இலக்காயிற்று.

**அந்தியநாட்கள் :**

தேவன் அர்ச். மார்கரித்அலக்கொக் அம்மாளுக்கு இட்டகட்டளையானது ஆச்சரியமானமுறையில் அனுசரிக்கப்பட்டது. கொலம்பியே சுவாமியார் எடுத்தமுயற்சிகளினால் தேவனதுகட்டளை பரப்பப்பட்டது. அக்கன்னியர் மடத்தவரும் தமது செல்வாக்குக்குத் தக்கபடி உழைத்துவந்தனர். அலக்கொக் கன்னியாஸ்திரி அம்மன்றத்தின் உபஅதிபராக்கப்பட்டாள். சகலரது ஒத்துழைப்பையும் பெற்று, யேசுநாதர் இட்ட கட்டளையின்படி தான் ஒழுகக் கிடைத்த சலாக்கியத்துக்கு அவருக்கு நன்றிகூறி மகிழ்ச்சியோடு தனது வியாதிதுன்பங்களை அனுபவித்து, 1690-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 17-ந் திகதி தேவனின் திருப்பாதம் அடைந்தாள். 1920-ம்ஆண்டு அர்ச்சியசிட்ட பட்டம் பெற்றாள்.

---

முது ஏறக்குறைய 200 ஆபிரிக்க குருமாரும், 200 குருமாணவருமுளர். தற்பொழுது உகண்டாவில் 1,800,000 கத்தோலிக்கரும், 72,000 ஆயத்தக்காரருமுளர். 750,000 புரொட்டெஸ்தாந்தரும், 65,000 முஸ்லீம்களுமுளர்.

**விருத்தி**

முதல் விசுவாசவிதையைப் பெற்ற றுபகா அதிமேற்றிராசனமாகி, சுதேசியான கிவனுகா ஆண்டகையின் நிர்வாகத்திலிருந்து வருகிறது. ஏழு மேற்றிராசனங்களுண்டு. 400 குருமார் திருத்தொண்டாற்றி வருகின்றனர். கடந்த ஆண்டுகளில் வேத விருத்தித்தொண்டு வளர்ந்தது மாத்திரமன்று, சுகாதாரசேவை, கல்வி, கலாசாரமும் எதிர்பாராத முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. தற்பொழுது 2,967 கத்தோலிக்க பாடசாலைகளும், 17 ஆசிரிய பயிற்சிக் கழகங்களுமுள தொழில்நுட்பக் கல்லூரியொன்று 1910-ல் நிறுவப்பட்டுளது.

**வர்த்தமானி**

கல்விவளர்ச்சியுடன் நூல்கள், பத்திரிகைகளும் பெருகின. லுகண்டாமொழியில் முதல் அச்சிடப்பெற்றது (1881) ஞானோபதேச நூலாகும். முன்னோ (உமதுநண்பன்) எனும் முதல் வர்த்தமானி 1910-ல் ஆரம்பமாயது. நெடுங்கணக்கற்றிருந்த லுகண்டாமொழியில், தற்பொழுது 3 அச்சகங்கள், வர்த்தமானிகள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் முதலியன பிரசுரித்து வருகின்றன.

சிறு முதலுதவிப் பெட்டியுடன் ஆரம்பித்தவைத்தியசேவையைத் தற்பொழுது பல மருந்துவிநியோக நிலையங்களும், கன்னியாஸ்திரிமாரும், தாதிகளும் தொண்டாற்றும் வைத்திய சாலைகளும் செய்துவருகின்றன.

அரசியற் சுதந்திரத்தைப் பெற்றிருக்கும் உகண்டா இன்னும் விருத்தியடைய இடமுண்டு. முன்னைய குடும்பக் கட்டுக்கோப்பு மாறி, புதிய அம்சங்கள் புகும்வேலை புதிய அமைப்பு வேண்டப்படுகிறது. கத்தோலிக்க புத்துணர்ச்சியுடன் சமூக, கல்வி, கலாசார, சுகாதார நலன்களும் இடம்பெறவேண்டும்.

சுதந்தரமடைந்து உலகநாடுகளின் குடும்பத்தில் இன்று இடம் பெறும் உகண்டா, அன்று ஞான முழுக்குப்பெற்றபொழுது பாரிய குடும்பமாகிய திருச்சபையில் இடம்பெற்றது. ஏழு ஆண்டுகளுக்குமுன் ஞானாதிகாரிய வரிசை ஏற்படுத்தியபொழுது பூரண வளர்ச்சிபெற்றது. திருச்சபையின் கிரீடத்தில் உகண்டா ஓர் "மணிமுத்து" எனில் மிகையன்று.

---

# மலைநாட்டில் நாம்

அ. — ஜோக்மவானே

நீர்வளம்போல், நிலவளம்போல், ஈழத்திரு நாட்டில் மதவளமும் செழித்து விளங்குவது மகிழ்வூட்டும் ஒரு உன்னத நிலையாகும். ஆனால், அதேபோது பகுத்தறிவுப் போர்வைக்குள் பக்தனுக்கும் பரமனுக்கும் உள்ள பந்தத்தை அறுக்கும் கூட்டமும் பல்கிப் பெருகுவதையும் நாம் மறுத்தற்கில்லை. 'கடவுளா?' 'மதமா?' என்று கேட்டுக் கண்ட கண்ட இடமெலாம் படைதிரட்டிப் பரிகாசப் பாக்கள் பாடும் அந்தப் 'பகுத்தறிவுக்' கூட்டத்தின் பலவித தீவிர எதிர்ப்பிரச்சாரத்தின் மத்தியிலும் வேதக்குரல் விண்ணகம்வரை ஒலிக்கவே செய்கிறது. இதிலிருந்து 'மதத்தை ஒழிக்கலாம்' என்று கங்கணம் கட்டும் கூட்டம் 'வாகை சூடலாம்' என்றெண்ணுவது கொம்புத் தேனுக்கு அவாகொண்ட முடவன் நிலை எய்துவது நிச்சயம் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இந்நாட்டில் கத்தோலிக்கமதம் இன்று உத்தரிக்கும் கட்டத்திலிருப்பது உலகறிந்த உண்மை. அரசியல்வாதிகள் எம்மதத்தை, மறக்குறவர்களைப் பகிரங்கமாய்த் தாக்குவதை ஏனென்று கேட்பாரில்லை. கத்தோலிக்காரகிய நாம் இவர்தம் கதறல்களைக் காதில் போட்டுக் கொள்ளாது 'எம் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உயர் கோட்பாட்டைக் கடைப்பிடித்து, மதவாழ்க்கையில் சற்றும் பிறழாமல் வாழ்வது இன்றைய நிலையில் மிகஅத்தியாவசியமாகும்.

எமது வாழ்க்கை நெறிமூலம் பிறரை எம்வயப்படுத்தலே வாழ்வில் எமது முக்கிய குறிக்கோள் என்பதை மறந்துவாழ்பவர் கத்தோலிக்காரகார். இந்தக் கருத்தைச் சற்றே கவனிக்கச் செய்து அனைவர் கவனத்தையும் மலைநாட்டுப் பக்கம் திருப்புதலே என் நோக்கமாகும்.

தேயிலை, றப்பர் தோட்டங்கள் கொண்ட மலைப்பகுதியிலே வாழும் ஒரு பெரும் அப்பாவிக்கூட்டம் உழைத்தலையே வாழ்வின் குறிக்கோளாய்க் கொண்ட கூட்டமாகும். கதிரவன் உதித்திட வீட்டைவிட்டு வெளிச் செல்லும் இவர்கள் 'அவன்'மறையும் தருவாயில்தான் மறுபடியும் இல்லம் ஏகுவர். இந்த நிலையில் மதத்தைப் பற்றி எண்ணிப் பார்க்க அவர்கள் நிலை இடம் கொடுப்பதில்லை. இவர்களுள் நமது கத்தோலிக்க மக்களின் நிலையென்ன? அந்தோ, பரிதாபம்! ஒரு தோட்டத்தில் சென்று அங்குள்ள ஒரு கத்தோலிக்கத் தொழிலாளர் வீடு செல்லின் அவர்தம் மதவாழ்வை எம்மால் மதிப்பிடமுடியும். நம்மவர்கட்கும், பிறமதத்தவர்கட்கும் வித்தியாசம் கொஞ்சமேனும் இல்லாததைக் காணலாம். க்த்தோலிக்கர் வீடுகளில் சுவர்களிலே பலமதத்தவர் படங்களையும் காணலாம். சிறுவர் முதல் பெரியவர்வரை செபம் தெரியாத நிலையில் தானிருப்பர். இந்நிலையில் 'குடும்ப செபம்'பற்றி விவரிக்கவும் வேண்டுமா?

குடும்பத்தில் எவருக்காவது சன்னியோ, சுரமோ கண்டால் பூசாரியை வைத்து உடுக்கடிப்பர். பிறமத வைபவங்களில் கலந்துகொள்வர். பிறமத வழிபாட்டு ஸ்தலங்கட்குச் செல்வர். ஏன் இப்படி? இந்நிலையை மாற்ற முடியாதா?

முடியும். நல்லமுறையில் தோட்டப்பகுதிகளில் விசுவாசப் பரப்புதலை மேற்கொண்டால். இன்று மலைநாட்டு மக்கள் தொழிற்சங்கங்களால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளனர். தொழிற்சங்கங்களோ அநேகமாக தொழிலாளரின் புறவாழ்க்கை சம்பந்தமாய் மட்டுமே தான் போராடுகின்றனவேதவிர அகவாழ்க்கை, முக்கியமாக சமயவாழ்க்கை சம்பந்தமாய் ஏதும் செய்வதாயில்லை. இந்நிலையிலே சங்கங்களோடு ஒரு சங்கமாய் ஆனால், அன்புமார்க்கச் சங்கமாய் மட்டுமே நம் கத்தோலிக்க இயக்கம் தோட்டங்களில் நுழைய வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் நம் இயக்கம் பங்குவாரியாக ஸ்தாபிக்கப்பட்டு அதன் கிளைகளை தோட்டவாரியாகப் பரப்ப வேண்டும். இந்தத் துறையில் ஈடுபடும்போது முதலில் பலகஷ்ட நஷ்டங்கட்கு நாம் ஆளாக நேரினும் ஈற்றில் நாம் வெற்றியடைவது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே!

ஐப்பசிமாதம் செபமாலை மாதாவின் மாதம். சென்றவாரம் 7-ந் தேதி செபமாலை மாதா திருநாளை ஆடம்பரமாகக் கொண்டாடியிருப்பீர்கள். இம்மாதம் முழுவதுமே முழுச் செபமாலையையும் நாளாந்தம் செபிப்பது கிறிஸ்தவர்களின் பாரம்பரிய வழக்கம். நாமும் இவ்வழக்கத்தைத் தொடர்பாகச் செய்வதுடன் குடும்ப செபமாலைப் பக்தியில் எமது வீட்டிலுள்ளவர்களை மாத்திரமல்ல, பக்கத்திலுள்ள அயலவர்களையும் ஈடுபடுத்தத் தெண்டிப்போமாக. வணக்கம்!

**சோதரி ரேஜா.**

## தெரிந்து கொள்ளணும் பெண்ணே!

**அன்புள்ள பிரமீளாவுக்கு!**

உன்மடல் அண்மியது. நீ இன்பமாக வாழ்க்கைநடத்துவதையிட்டு மனமகிழ்ச்சியே, இந்தஇன்பம் வாழ்நாள்முழுவதும் நீடிக்கச்செய்வது உன்கையில்தான் தங்கியுள்ளது. நீ புதிதாகக் குடியேறப்போகும் மனையைப்பார்வையிட்டு உன்திருப்தியைத் தெரிவித்துள்ளாய். சரி, நீ புதிதாக வாங்கப்போகும் தளபாடங்களை வீட்டுக்கு ஏற்றதாகவும், உறுதியானவையாகவும் தெரிந்துகொள்வதில் கவனஞ்செலுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்க!

முதலில் உன்வீட்டின் வரவேற்பறையை அலங்காரமாக வைக்கும் முறையைப் பற்றி ஆலோசிப்போம். இவ்வறையில் நான்கு அல்லது ஆறு நாற்காலிகள் மூலைப்பகுதிகளில் அலங்காரமாக வைக்கலாம். நடுவே ஒரு அழகான கம்பளத்தைவிரித்து ஒரு சிறு முக்காலியைநிறுத்தி அதன்மேல் பூச்சாடியொன்றை வைக்கலாம். இதில் செயற்கைப் பூக்களையும், இயற்கைப் பூக்களையும் மாறி மாறி வைக்கலாம். வானொலிப் பெட்டி வைக்கும் சிறுமேசை, சிறுகண்ணாடி அலுமாரிகள், சிறுசிறு முக்காலிகள், முதலியனவும் இவ்வறையில் இடம் பெறலாம். நாற்காலிகள், முக்காலிகளை விரிப்புகள், கதிரைச்சீலைகள், சிறுதுண்டுகளினால் அலங்கரிக்கலாம். கண்ணாடி அலுமாரிகளில் வாசிகசாலை போன்று நூல்களையோ அல்லது அலங்காரப் பொருட்களையோ அழகுறவைக்கலாம். வரவேற்பறையில் உள்ள முக்காலிகளில் குடும்பபோட்டோ தொகுப்பு புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியனவற்றை வைத்தால் விருந்தினர் தனிமையாக இருக்கும்போது அவற்றைப்பார்த்துப் பொழுதைப்போக்குவார்கள். அனாவசியமான வேறுபொருட்கள்எதுவும் இவ்வறையில் இடம்பெறலாகாது.

வீட்டில் ஒன்று, இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட படுக்கையறைகள் இருக்கலாம். இவ்வறைகளிலும் அனாவசியமான பொருட்களைத் தவிர்க்க வேண்டும். படுக்கையறை எப்பொழுதும் புனிதமாக இருக்கவேண்டும். ஒருபடுக்கையறையில் இரண்டொரு கட்டில்கள், ஒருகண்ணாடி மேசை, உடைகள் வைக்கும் அலுமாரியொன்று, உடைகளைக் கழற்றிப்போடுவதற்கு ஒருஸ்கிறீன் முதலியனமட்டும் போதுமானது. கட்டில்கள், அலுமாரிகளின்கீழ் பொருட்களை அடுக்கி வைப்பது அநாகரிகமானது. கட்டில்களில்போடும் படுக்கைவிரிப்புகள், தலையணையுறைகள் கிழமைக்கொருமுறை மாற்றப்படவேண்டும். ஸ்கிறினில் உடைகள் எந்நேரமும் தொங்கிக்கொண்டிருக்காமல் கூடியவிரைவில் மடித்து அலுமாரியில் அடுக்கப்பட வேண்டும். கண்ணாடிமேசையிலுள்ள முகப்பவுடர், சீப்பு, மற்றும்பொருட்கள் பாவித்துமுடிந்தவுடன் மேசை லாச்சிகளில் ஒழுங்காக அடுக்கிவைத்துவிட வேண்டும்.

அடுத்ததாக உணவருந்தும்அறைக்குச் செல்வோம். இவ்வறையில் உணவருந்துவதற்கு ஒருபெரியமேசை, பலநாற்காலிகள்முதலியவற்றை அறையின் மத்தியில்வைக்கலாம். மேசைக்கு மெழுகுசீலைவிரிப்பது சிறந்தது. உணவருந்தி முடிந்ததும் தண்ணீரில் தோய்த்த சீலையினால் இலேசாகத் துப்புரவாக்கிவிடலாம். மேசையில் இயற்கைமலர்கள் நிறைந்தசாடியை வைப்பது நல்லது. உணவருந்தும் பீங்கான்கோப்பைகள், கண்ணாடித்தம்ளர்கள் முதலியவற்றை அலுமாரியில் அல்லது பலகைகளினாலான தட்டுகளில் அடுக்கிவைக்கலாம். தேவையான வேளைகளில் எடுத்துப்பாவித்து முடிந்தவுடனே துப்பரவாகக் கழுவி ஒருதுணியினால் துடைத்து, திரும்பவும் அடுக்கிவிடவேண்டும். கழுவாது அப்படியே விட்டுவிட்டால் பின்னர் துப்புரவாக்குவது கஷ்டம். அத்துடன் ஈமுதலியன மொய்த்து, சுகத்துக்கும் கெடுதிவிளைவிக்கும். உணவைத் தயாரித்தபின் உணவுகளை இவ்வறையிலேயே வைத்து மூடிவைக்கலாம். எப்போதும் மேசையில் ஒரு கூசாவில் தண்ணீரும், ஒருகண்ணாடித் தம்ளரும் வைப்பது நல்லது.

இப்பொழுது சமையலறையில் நுழைவோம். சமையலறையின் புனிதத்தில்தான் வீட்டிலுள்ளோரின் சுகநலன் தங்கியுள்ளது எனலாம். ஆனால், பெரும்பாலான வீடுகளில் வீடுமுழுவதும் புனிதமாயிருக்கும். சமையலறையோ சாக்கடையிலும் கேவலமாயிருக்கும். சமையலறைப் புனிதத்தில்தான் ஒரு பெண்ணின் தன்மையைக் கண்டுபிடிக்கலாம். சமையலறையில் அன்றாடம் சேரும் குப்பைகள், சாம்பல், அழுக்குத் தண்ணீர் முதலியன உடனுக்குடனே வெளியேற்றப்படவேண்டும். ஒவ்வொரு நாளும் சமையலுக்கு உதவும் பாத்திரங்களை நீரில் கழுவி வெயிலில் காய வைப்பது நல்லது. காலையில் சமையலறையைத் துப்பரவாகக் கூட்டிச் சமையலைத் தொடங்கலாம். மத்தியானச் சாப்பாடு முடிந்தபின் திரும்பவும் துப்பரவாக்கிவிட்டால் சமையலறை எப்போதும் புனிதமாக இருக்கும். கோப்பி, சீனி, தூள்வகைகள், கறிச்சரக்குகள் இவற்றைத் தகரடப்பாக்களிலோ, போத்தல்களிலோ போட்டு மூடி, அவற்றின் பெயர்களையும் ஒட்டிவைத்தால் அதிக தேட்டத்தைத் தவிர்க்கமுடியும். இவற்றை அலுமாரியிலோ, உயரமான—கைக்கெட்டக்கூடிய இடத்திலோ அடுக்கி வைக்கலாம். சிமெந்துபோடப்பட்ட சமையலறையானால் அடிக்கடி கழுவித் துப்பரவாக்கலாம்.

இவற்றைவிட விருந்தைகள் உள் வீட்டில் இருப்பின் அவற்றையும் வரவேற்பறைபோல நாற்காலிகளால் அலங்கரிக்கலாம். பொருட்களைச் சேகரிக்கும் அறையொன்றிருந்தால் அதில் பிறபொருட்கள் யாவற்றையும் சேகரித்துவைத்துத் தேவையான வேளைகளில் எடுத்துப் பாவிக்கலாம். இவ்வறையும் புனிதமாக இருக்க வேண்டும். இல்லையேல் எலிகள், கறையான் [illegible] பிருக்கத் தொ[illegible]பொருட்களைப் பாழாக்கிவிடும். இன்னும் ஒரு அறை மேலதிகமாக இருக்குமானால் அதை வீட்டுக்கு வரும் விருந்தினர் தங்குவதற்குப் பாவிக்கலாம். இவ்வறையில் ஒருகட்டில், கண்ணாடி மேசையொன்று, ஒருசிறு அலுமாரி, ஓரிரு நாற்காலிகள் முதலியன போடப்பட்டிருக்கலாம். ஆபீஸ் அறை ஒன்றிருக்குமானால் அங்கே நூல்களை அலுமாரிகளில் அடுக்கிவைக்கலாம். எழுத்து மேசையொன்று, அதற்கேற்ற நாற்காலி, வேறும் ஓரிரு நாற்காலிகள் இங்கே இடம்பெறலாம்.

வீடு முழுவதையும் ஏற்ற நிறமான திரைச்சீலைகளினால் அலங்கரிப்பது நன்று. இவற்றிலும், கதிரைச் சீலைகளிலும் நாளாந்த பாவிப்புக்காக இரண்டுவகைத் துணிகளைத் தயாரித்துவைத்தால் மாறிமாறிப் பாவிக்கலாம். வைபவ நாட்களுக்கு வேறு நல்ல நிறமுள்ள துணிகளைத் தயாரிக்கலாம்.

சரி, அதிகமெழுதிவிட்டேன். "என்ன, தோழியிடமிருந்து பாரதம் வந்திருக்கிறது" என்று உன் கணவர் கேலிசெய்யப்போகிறார். அடுத்தவாரம் உனது மனையாளுக்குரிய கடமைகளையும், நீ வீட்டலுவல்களை நிர்வகிக்க இலேசான வழிகளையும் தெரி[illegible]த்தட்டுமா?

**புனிதா.**

## எப்படிச் சொல்வேனடி......

— **ராஜம் கூறுகிருள்**

● காலையில் திருந்தாதிமணிகேட்டதும் எழுந்து காலைச்சமையலை முடித்துவிட்டு வீட்டையும், அதன் சுற்றுப்புறங்களையும் கூட்டித் துப்புரவு செய்து என் வீட்டைத் தேவாலயம் போலப் பரிசுத்தமாகக் காப்பாற்றுவதில் எனக்கு வெகு அக்கறை. எச்சமயத்தில் எவர் வீட்டினுள் நுழைந்தாலும் "சிறுபிள்ளைகள் இருக்கும் உன் வீட்டை எப்படி இவ்வளவு **புனிதமாக** வைத்திருக்கிறாய்" என்று குறிப்பிட்டு என்னைப் புகழாமல் திரும்புவதில்லை. அப்போதெல்லாம்என் மனம்அடையும் பெருமையை......எப்படிச் சொல்வேனடி!

● எனதுபெண்குழந்தைகள் நால்வர் இருக்கிறார்களே. அவர்கள் வளர்ந்தவர்கள்தான். நாகரீக முறைகளை அறிந்தவர்கள்தான். இருப்பினும் தற்கால மோடிகளைப்பின்பற்றி, **உதட்டுச்சாயம், நகச்சாயம்** பூசுவதிலோ ஆடம்பரமாக உடுத்துவதிலோ, பகட்டாக நாலு ஆடவர்முன்னிலையில் திரிவதிலோ அவர்கட்கு அற்பமும் விருப்பமில்லை. நான் வாங்கிக்கொடுக்கும் உடைகளுடனும், ஆபரணங்களுடனும் அவர்கள் எளிதில் திருப்தியடைந்துவிட அவர்களைப் பழக்கிவைத்திருக்கிறேன். இதைக்கண்டு பிறமங்கையர்கள் என்பெண்களைப் பாராட்டும்போது ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் என் ஆனந்தத்தை...... எப்படிச் சொல்வேனடி!

● என் கணவர் இருக்கிறாரே! இறைவன் கண்நிறைந்த கணவனைமட்டுமா எனக்களித்தார்? தான் உண்டு தன் வேலையுண்டு **தன் மனைவி மக்களுண்டு** என்ற கொள்கையுடையவர். மாலைநேரமென்றால் வீட்டிலோ, வெளியிலோ எங்களைக் குடும்பசமேதராய்த்தான் காணலாம். மற்றக் குடும்பங்களைப்போல் இடையில் எம்மிடையேயும் மனக்கசப்பு ஏற்படுவதுண்டு. ஆனால், சூரியன் அஸ்தமிக்குமுன் நாம் மறுபடியும் புதுமணத்தம்பதிகள்போல் உரையாடத் தொடங்கிவிடுவோம். இவ்விதம் எனது வாழ்க்கைப்படகை இன்பமாக ஓட்டத்துணைபுரியும் கணவரை, நான்அடைந்த அதிர்ஷ்டத்தை ... எப்படிச் சொல்வேனடி!

● எனது ஐந்தாவதுபையன் ராஜு இருக்கிறானே. நான்கு பெண் குழந்தைகளின்பின் தவமிருந்துபெற்ற என் செல்வமகன் அவன். சென்றமாதந்தான் தான் **குருவாக** வரவிரும்பி எம்மிடம் உத்தரவுகேட்டான். வீட்டில் யாபேருக்கும்விருப்பமே. ஆயின் இரத்தபாசம் அவனைத்தடுக்க எண்ணியது. இறைவன் எமது குடும்பத்தில் தேவஅழைத்தலைக்கொடுத்த அதிர்ஷ்டத்தை எண்ணி மனப்பூர்வமாக அவனைக் குருமடத்துக்கு அனுப்பிவைத்தோம். ஒருநாள் அவனைக் குருவாகப் பலிபீடத்தில் காணவும், அவன் கையால் தேவனைப்பெறவும் நான் பெறப்போகும் பாக்கியத்தை......எப்படிச் சொல்வேனடி!

● இரண்டுமாதங்களின்முன் என் கடைக்குட்டி ரவி மூன்றுவயதுப் பாலகன் எம்மைவிட்டுப் பரலோகம் பறந்து சென்றுவிட்டான். என் மனதிலெழுந்த வேதனையை ஆற்றமுடியவில்லை. பெற்றமனம் விம்மிப்பொருமிக் கண்ணீர் வடித்தது. எதனாலும் என் மனத்துயரை ஆற்றமுடியாது தவித்தேன். என்மூத்தமகள் ஒருநாள் ஒரு நூலை எனக்கென்று வாசிகசாலையிலிருந்து கொண்டுவந்து கொடுத்தாள்; படித்தேன். சின்னஞ்சிறார் மோட்சத்தில் அனுபவிக்கும் பேரின்பத்தைச் சிந்தித்தேன். இறந்தோருக்காக அளவுக்கதிகமாகக் கண்ணீர்சிந்துவது இறந்தவர்களடையும் இன்பத்துக்கு முட்டுக்கட்டைஎனக் கூறும் கதையையும் படித்தேன். என் செல்வன் பரலோகத்தில் ஒரு மாசற்ற **சம்மனசு** என்று எண்ணி நான் அடைந்த ஆறுதலை......எப்படிச் சொல்வேனடி!

● எமது குடும்பம் பெரியது. இதனால்அடிக்கடிபணக்கஷ்டம், வேறு மனச்சஞ்சலங்கள் ஏற்படுவது சகஜம். இருப்பினும், நாம்இவற்றையெல்லாம் மனச்சந்தோஷத்துடன் மேற்கொள்ள முடிகிறது. இதன் இரகசியம் எங்கே தங்கியிருக்கிறது என்று யோசித்தேன். ஆமாம் அநுதினமும் இரவில் ஒருங்கு கூடிக் **குடும்பசெபமாலை** சொல்லுகிறோமே. இப்பக்திதான் எம்மைப் பாதுகாத்து முன்னேற்றத்துக்கு வழி வகுக்கிறது. எமது குடும்பத்திலுள்ள அனைவரும் திரும்பவும் ஒருநாள் இறைவன் பாதத்தில் மோட்சபேரின்பத்தை அனுபவிக்க ஒருங்குகூடுவோம் என்று நினைக்கையில் நான் அடையும் அக்களிப்பை......எப்படிச் சொல்வேனடி!

### ஒரு வேண்டுகோள்

## குருசுக்கோவில் கட்டடநிதி

கிறீஸ்தவர்கள் "கிறீஸ்தவர்கள்" என்னும் தங்கள் மகிமையான நாமத்துக்கு யோக்கியமுள்ள மக்களாய் இருக்கவும், சிலுவை வரும்பொழுது அதை நல்மனத்துடனஏற்று, அதைநேசித்து அரவணைக்கவும், திருச்சிலுவையைச்சேவிக்கவும், எங்கள் நாளாந்தசிலுவைகளை நமது திவ்வியஇரட்சகரின் இரட்சணியசிலுவையுடன் ஒன்றித்து, எங்கள் கிறிஸ்தவ சீவியத்தை ஆழ்ந்தசெயலில்உள்ள உயிருள்ள விசுவாசத்தில் போஷித்து வளர்க்கவும், கடவுளில்தங்கி எல்லையற்றநம்பிக்கையுடன் சீவிக்கவும், கடவுளின் கர்த்தத்துவத்துக்கு எதிராகச்செய்யப்படும் பாவப்பழிகளுக்கும், விக்கிரக ஆராதனைகளுக்கும் ஓர்பரிகார ஸ்தலமாகவும், **இத்தேவாலயம் கட்டப்படவிருப்பதால்** இக்கோவில் கட்டடநிதிக்காக நீர் அனுப்ப விரும்பும் காணிக்கையை,

**வண. கட்டளைக்குரவர்,**
"குருசுக்கோவில் கட்டடநிதிக் காரியாலயம்"
பெரியதெரு, நீர்கொழும்பு

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி தயவாகக்கேட்கும்,

**அதிவண. எஸ். பொன்னுந்துப்பிள்ளை,**
ஒ. எம். ஐ.
கட்டளைக்குரவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

**சரியான விடைகள் :**

1. இதுவரை 20 பொதுச்சங்கங்கள் நடைபெற்றிருக்கின்றன.
2. ஆருவது பொதுச்சங்கத்தில் இத்தீர்மானம் பிரகடனப் படுத்தப்பட்டது.
3. வியென்நகரில் 5-ம் கிளமெந்து பாப்புவால் கூட்டப்பட்டது.

**விடைகள் அனுப்பியோர் :**

1. செல்வி டொறற்ரு பத்திநாதர்
2. செல்வி இராசேஸ் சூசைப் பிள்ளை.

இருவரும் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியாமடத்துத் தமிழ்ப் பாடசாலை மாணவிகளாவர்.

**புதிய கௌரவம் :**

பாப்புவின் வாசஸ் தலத்திலுள்ள சாளரமொன்றினூடாக இராயப்பர் மகாலயத்தின் சதுக்கத்தைப் பார்க்கலாம். இந்தச் சாளரத்தின்பக்கமாக நின்றுகொண்டே திருச்சபையின் தலைவர்கள் இராயப்பர்மகாலய சதுக்கத்தில் வந்துகூடும் யாத்திரிகர்கள், விசுவாசிகள் என்போருக்குப் பொதுப்பேட்டியளிக்கின்ருர்கள். அத்தருணங்களில் பாப்புவின்பக்கத்தில் எவரும்இருப்பதில்லை. அண்மையில் 23-ம்அருளப்ப பாப்பரசர் தம்மைச்சந்திக்கவந்த பிரமுகர்ஒருவருடன் அந்தச் சாளரத்தினூடாகக் காட்சிதந்தார். இப்படிப்பட்ட கௌரவம் இதுவரை யாருக்கும் கிடைத்ததில்லையெனக் கூறப்படுகிறது. இவ்வாரத்திய எமது முதலாவதுவினு இதுதான். இப்பெரிய கௌரவத்தைப் பெற்ற பிரமுகர் யார்?

**இஸ்பிரீத்துசாந்துவே வாரும் :**

திருச்சபைப்பொதுச்சங்கம் ஆரம்பமாகுமுன்னர் பாப்பு வேனிக்கிரேயாத்தூர்என்றகீதத்தைப்பாடி இவ்வைபவத்தைத் தொடக்கிவைப்பாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது இரண்டாவதுவினு இக்கீதத்தைப்பற்றிய தே. வேனிக்கிரேயாத்தூர் என்ற சங்கீதம் எந்தநூற்றுண்டில் இயற்றப்பட்டது?

விடைகள், 17-10-62-க்கு முன்னதாகப் பேசும்பேனு, பாதுகாவலன் அலுவலகம் மேற்றிராசனமாளிகை, யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**யூபிலிவிழா :**

முன்னர் யான்கூறியதுபோல இளவாலைக் கியூரியாவினுல் ஒழுங்குசெய்யப்பட்ட மரியாயின்சைனிய கால்நூற்ருண்டுவிழா எதிரேவரும் 14-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை சில்லாலையில் நடைபெறவிருக்கிறது. சேனைபற்றிய கலந்துரையாடல்அரங்கு சில்லாலை, ஆண் பாடசாலையிலும், சேனைக்கண் காட்சி பொன்று சில்லாலை, பெண்பாடசாலையிலும் நடைபெறுமென அறிவித்துள்ளனர்.

எம் யாழ்ப்பாணப்பகுதியில் மரியாயின்சேனை யூபிலிவிழாவை முதலில் கொண்டாடும் இளவாலைக் கியூரியாவை நாம் பாராட்டுவதுடன் வசதியுள்ளோர் அனைவரும் சில்லாலையில் நடைபெறும் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

**புத்தகக் கண்காட்சி :**

சில்லாலையில் 14-ந்தேதி ஞாயிறன்று நடைபெறும் மரியாயின்சேனைக் கண்காட்சியில் ஒருபகுதியாகக் கத்தோலிக்கபுத்தகங்கள், பத்திரிகைகளின் காட்சி ஒன்றையும் மரியன்னை நூல்நிலையத்தினர் ஒழுங்குசெய்துள்ளனர்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துகொள்ளுமாறு பிறகிறீஸ்தவ திருச்சபைகட்கும், ஒன்பதாவத்து பத்திநாத பாப்பரசர் அழைப்புஅனுப்பியிருந்தார். ஆயின், சங்கம்பற்றிய செய்திகளும், முக்கிய அறிவிப்புகளும் கொண்ட அழைப்பிதழ் பலதிருச்சபைத்தலைவர்களுக்கும் சேர்வதற்குமுன்னுல் இவ்விரகசியம் எவ்வழியாயோ பகிரங்கப்படுத்தப்பட்டு விட்டது. எனவே, கோபமடைந்த கொன்சாந்திநோபிளிலிருந்த புரொட்டஸ்தாந்த பிதாப்பிதா தமது அழைப்பிதழைப் பாப்புவுக்குத் திருப்பியனுப்பினுர். மற்றத்தலைவர்களும் இவ்விதமே செய்தனர். இதன்பயனுகப் புரொட்டஸ்தாந்த சபையினர் எவருமே இச்சங்கத்தில் கலந்துகொள்ளவில்லை.


## ஓர் அரிய சந்தர்ப்பம்!

உங்களுக்குத் தேவைப்படக்கூடிய
கீழ்க்கண்ட சுரூபங்கள் எங்களிடம் கிடைக்கும்.

- **அர்ச். யூதா ததேயு**
  இதன் மாதிரி கம்பஹா, இந்திகொல்லை கோவிலின் வண. பிதா சுப்பீரியர் அவர்களால் அங்கீகாரம் பெற்று அக்கோவிலுக்குச் செய்துகொடுக்கப்பட்டது.
  அளவுகள் : 24", 36", 42", 60".
- **சதாசகாய மாதா** அளவுகள் : 24", 48".
- **வியாகுல மாதா** அளவு : 60".
- **சிலுவைப்பாதை செற்** அளவுகள் : 42" × 36".

மற்றும் விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்

**த நிவஸ் ஸ்டோர்ஸ்,**
சுரூபங்கள் தயாரிப்பாளர்கள்,
106, மெயின்வீதி, நீர்கொழும்பு.


**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

பரி. சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். அன்னம்மாள், அர்ச். யூதாததேயு, அர்ச். நீக்குலாவு, அர்ச். தீற்ரு இவர்களின்மூலம் நற்கருணைநாதரிடம் கேட்டமன்ருட்டு அனுகூலமானதற்கு நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன்.

கொழும்பு ஓர் பக்தன்.
175/62

எந்நாளில் நீ நற்கிரிகை ஒன்றும் செய்யவில்லையோ அந்நாள் உனக்கு வீண் நாள். — அர்ச். பெர்னுர்து.

**மேற்றிராசனச்செய்திகள்**

### ● நீர்கொழும்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாமாகி வருகிறதைக் காண்பது ஒரு தேவாதீனச் செயலென்றே சொல்ல வேண்டியிருக்கின்றது.

பிற்காலத்தில் வண. மத்தியுசுவாமியாரின் பிரயாசையால் அங்கு ஒரு பலிப்பீடம் கட்டப்பட்டுள்ளது. பின்பு அத்திருச்சிலுவையைத் தியானிக்கச் செல்பவர்கள் தம் தரிசனையைப் புனிதமாக்கச்செய்ய, செல்லும்வழியேதிருச்சிலுவை ஸ்தலங்கள் வண. கட்டளைக்குரு எஸ். பெர்னுந்துப்பிள்ளை, O. M. I. சுவாமி அவர்களால் கட்டப்பட்டு, இப்பொழுது ஒரு குருசுக்கோவில் எனச் சிறப்புப்பெயருள்ள திருச்சிலுவைக்கோவில் அதிமேற்றிராணியாண்டவரின் அங்கீகாரம் பெரும்மகிழ்ச்சியுடன் பெற்றதோடு மூதலாம் கற்பனைக்கு கெதிரான பாவங்களுக்கான பரிகாரஸ்தலமாகச் செய்யவும் வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. தேவனின் வழிகள் ஆச்சரியத்துக்குரியவைகள். சிறு விதை பெருமரமாகி பறவைகள் தங்கும் ஸ்தலமாகும் காலமாகிவிட்டது. திருச்சிலுவையே வாழ்க!

* * *

கொழும்பு அதிமேற்றிராசனத்தின் தமிழ்ப்பேசும் மக்களின் இல்லற அப்போஸ்தலத்துவத்தை மென்மேலும் வளர்த்து ஊக்குவிக்கும் பொருட்டு, 1956-ம்வருடம் ஐப்பசிமாதம் கொழும்பு, அதிமேற்றிராணியாண்டவராகிய மகாவக். தோமஸ்கூறே, O. M. I. ஆண்டவர் அவர்கள் கொட்டாஞ்சேனை சந்தலூசியா அதிமேற்றிராசனப்பங்கில், 'பரிகாரமாதா' என்ற நாமங்கொண்ட மரியாயின் சேனை கியுறியாவை தொடக்கி வைத்தார்கள். செனட்டஸ் ஆத்துமகுருவாகிய அதிவண. நேரியஸ்சுவாமி அவர்களின் ஊக்கத்தால், மூன்று சைனியங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கியுறியா பலவாகப் பெருகி இப்பொழுது பெரிய ஆலவிருட்சமாகி, கொழும்பு அதிமேற்றிராசனம் முழுதும் பரவிவிட்டது. தோட்டக்காடுகளிலும் வேரூன்றியது.

பல சைனியங்களைக் கொண்ட 'பரிகாரமாதா' கியுறியாவின் வருடாந்த வெளிப்பண்டிகை சென்ற ஞாயிறு 23-ந்திகதி பமுனுகமுவ என்னும் இடத்தில் நடைபெற்றபொழுது அதன் ஆத்தும குருவாகிய வண. வியாத்தினம், O. M. I. சுவாமியாரும் மற்றும் சில ஆத்துமகுருக்களும் சமுகமளித்தனர்.

திவ்வியபூசை நடைபெற்றபொழுது கொடுக்கப்பட்ட பிரசங்கத்தில், போதகக்குருவானவர்: "இது உங்கள்யுகம். திருச்சபையின் வளர்ச்சி உங்கள் முன்னோரில் தங்கியது; உங்களில் தங்குகின்றது; உங்கள் வழித்தோன்றல்களில் வருங்காலங்களிலும் தங்கும்" என்று கூறினுர்.

இந்தக் கியுறியாவில் முக்கியகவனத்துக்குரியன கொட்டாஞ்சேனையில் துறைமுகத் தொழிலாளருக்கும், பெரியதெரு, நீர்கொழும்புக் கடற் தொழிலாளருக்கும், அமைக்கப்பட்டு மிகவும் திருப்திகரமாகத் தொண்டாற்றிவரும் மூன்று மரியாயின் சேனைச் சைனியங்கள்.

குற்றமற்ற சந்தோஷங்களைப் பரிசுத்தமாக்கவும், சேனையாளரை உற்சாகப் படுத்தவும் விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. நடனச் செயல்கள், பாட்டுப் பெருக்குகள் மகிழ்வை ஊட்டின. வெற்றி பெற்ரேருக்குப் பரிசுகள்வழங்கப்பட்டு ஆத்தும குருவானவரால் நன்றித்துதியும் கூறப்பட்டபின், பங்குக்கோவிலில் சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் உல்லாசப்பயணம் முடிவுற்றது.

அதிமேற்றிராசனத்தில் இல்லறத் தொண்டர் திருச்சபையின் சேவையில் ஈடுபட அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்கள் தமிழ்ப்பேசும் மக்களுக்கென ஆரம்பித்த இந்தப் 'பரிகாரமாதா' கியுறியா வளர்ந்து வருவதாக. தமிழ்ப்பேசும்மக்கள் பின்னிடாது, இல்லறத்தார் யுகமாகிய இக்காலத்தில் திருச்சபைத் திருப்பணியில் முன்னணியில்போய் ஞானப்போராட, தமிழ்ப்பேசும் பகுதிகளில் புதியசைனியங்கள் முளைத்தெழும்ப மரியாய் தனது வேலையை ஆரம்பிப்பாளாக.

நிருபர்.

**நன்றித்துதி**

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரிசுத்த சதாசகாயமாதா, மருதமடுத் திருச்செபமாலை இராக்கினி, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதா ததேயு இவர்களதும் மற்றும் சகலஅர்ச்சியசிஷ்டர்களினதும் வேண்டுதலினுலும் நான் இரந்து கேட்ட சகாயம் கிடைக்கப்பெற்றேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரதாமதத்திற்காய் மன்னிப்பு வேண்டுகிறேன்.

ஓர் பக்தன்.

## 1-ம் வருட மரணஞாபகம்
## 13-10-1962

எங்கள் சிருட்டிகரும் இரட்சகருமான சருவேசுரா! எம்மை விட்டு மறைந்த ஆனுசியின் ஆத்துமத்தை உமதுபரிசுத்த வான்களின் திருக்கூட்டத்திலே சேர்த்து, அவளுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும், ஆமென்.

"சீவியத்தில் இவளை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

இவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-10-62 ஞாயிற்றுக்கிழமை இளவாலை சந்தியோகுமையோர் தேவாலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் யாவரையும் இவ்வான்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படிகேட்டுக் கொள்ளுகிறோம்.

இவளைஇழந்து துன்புறும் கணவன்: அ. ஆசிர்வாதம், பிள்ளைகள்: திருச்செல்வம், குருசுமுத்து, யேசுநாயகம், அட்றி ஆனந்தம்.

"சன்றைஸ்" 172/62.
இளவாலை



## 5-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு: 1-10-1897. இறப்பு: 4-11-1957.

பூதவுலகவாழ்வில் எங்களைவிட்டுப் பிரிந்தாலும், சதாஎம்நினைவைவிட்டு அகலா என் அருமைப்பத்தாவும், என் பிள்ளைகளின் நேசத்தகப்பனுருமாகிய ஜோண் விஸ்தரினி பெர்னுண்டோ ஆசிரியர் அவர்கள் காலமான 5-ம்வருடஞாபகதினம் எதிரேவரும் கார்த்திகை 4-ம் திகதியாகும். சங். சந்நியாசிகளே கன்னியாஸ்திரிகளே, விசுவாசிகளே, இவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தயவாய்வேண்டுகிறோம்.

"முடிவில்லாதபிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவர்பிரிவால் வருந்தும்
திருமதி எம் எம். பெர்னுண்டோவும்
பிள்ளைகளும்.

173/62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சியில்.....

டிக்கெற் என்ன விலை?

இருபத்தைந்து சதம்தான்.

பணம் கைமாறுகிறது. சில சீட்டுகள் தரப்படுகின்றன.

ஒரு கன்னிகை அவசரமாக அந்தச் சீட்டுகளைப் பறிக்கிறார். நாங்கள் விழிக்கிறோம்.

இவ்வழியாகப் போங்கள் என நங்கையொருத்தி ஒயிலாகக் கூறுகிறாள்.

அவ்வழியில் போகிறோம்.

இரு பக்கமும் வர்ண விளக்குகள். கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போலிருக்கிறது. முன்பாகப் போகிறவர்களைப் பின்தொடர்கிறோம்.

ஒளிவெள்ளம் தோன்றுகிறது. பாண்ட் வாத்தியம் முழங்குகிறது. ஒலிபெருக்கி அலறுகிறது.

ஐஸ்கிரீம், பொப்சிக்கல் என்ற பெயர்களால் வானரக் குஞ்சுகள் எதையெதையோவெல்லாம் வாய்களில்போட்டு வழியவிடுகின்றனர்.

வலதுபக்கத்தில் ஒருசிறு மண்டபம். அதற்குள் நுழைகின்றனர். பலர். நாமும் தொடர்கிறோம். ஒருகன்னிகை எம்மை நோக்கி வருகிறார். வினவுவதற்கு முன்பாகவே வாயைத் திறக்கிறார். ரேப் றெக்கோட் எந்திரம் மாதிரி மளமளவென்று பேசுகிறார். பத்துக்கற்பனைப் படங்களை விளக்குகிறார். போட்டோ நகரில் கதிர்பாத்திரத்தில் காட்சிதந்த இருதயநாதரின் காதையை ஆனந்தமாக வர்ணிக்கின்றார்.

பின்னாக வருபவர்களிடம் கன்னிகையை ஒப்படைத்துவிட்டு முன்னேறுகிறோம்.

அங்கு மற்றொரு கன்னிகை. அவரும் தொடங்கிவிட்டால் என்ற லிப்பெட்டி உருவாகிறது. விஞ்ஞானத்தின் விந்தைகள் பலவற்றைப்பார்க்கிறோம். விளக்குகின்றனர் பல சிறுமிகள். ஆனந்தமாகக் கிரகிக்கின்றோம். ஆயின் சனக்கும்பல் முட்டிமோதி எம்மை வெளியே தள்ளுகிறது. கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்கள் கியூவரிசை ஏற்படுத்தியிருக்கக் கூடாதோ?

மைதானத்தில் சனத்திரள் அதிகமாகிறது. விசாரித்தால் பைசாகொடுத்து நைசா ஆடும் ஆட்டங்கள் என்று தெரிகிறது. நண்பர்கள் முன்னேறுகின்றனர். மெல்லத் தொட்டுக்கொண்டே நழுவுகின்றேன். மெதுவாக.

அமெரிக்க சுதந்திரச்சிலை வரவேற்கிறது. ராசராசசோழன் கம்பீரமாகக் காட்சி தருகிறான். அந்தக்காலத்தில் சரித்திரத்தில் படித்தவைகளை நினைத்துப் பார்க்கிறோம். இந்தக்காலத்துப் பையன்கட்குச் சரித்திரம் தெரியுமா என்ன? இல்லாவிடில் ஒவ்வொன்றும் விளக்கம் கேட்டுக்கொண்டிருப்பார்களா?

தாஜ்மகாலின் பக்கத்தில் யங்கிஸ்டைல் இளைஞர்கள் முற்றுகையிடுகின்றனர். காதலுக்காகக் கட்டினான் என்கிறான் ஒருவன். காலஞ்சென்ற மனைவியின் நினைவாக என்கிறான் மற்றொருவன். அந்தக்காலத்து அரசர்கள் இப்படியெல்லாம் கலைக்கோயில்களை எழுப்பினார்கள். இந்தக்காலத்து அரசர்களோ?

கங்காரு ஒன்று எட்டிப் பார்க்கிறது. அவுஸ்திரேலியாவா எனக் கேட்டுச் சந்தேகம் போக்கிக்கொள்கிறேன். பொன்னும், வெள்ளியும் பளிச்சிடுகின்றன அந்தநாட்டிலே.

## நமது நிருபர் அமலன்

பயம் நெஞ்சை உறுத்துகிறது. படங்களையே நோக்குகிறோம். வத்திக்கான் சங்கம் என்று ஏதோ நடாத்துகிறார்களாம். அதைப்பற்றி ஒரு பக்கத்தில் விளாசித்தள்ளியிருந்தார்கள். கத்தோலிக்கசேவை, தேவதிரவிய அனுமானங்கள் முதலிய பல பொருள்கள்பற்றிய காட்சிகள். அவற்றை விளக்கும் கன்னியர்கள்.

சனக்கும்பல் எம்மை வெளியே தள்ளுகிறது. மண்டபத்தில் ஆடையலங்கார பவனி நடைபெறப் போவதாக ஒலிபெருக்கி கூறுகிறது. இந்தக்காட்சி பார்க்க வருபவர்களிடமெல்லாம் அதைத்தானே பார்க்கிறோம் என்கிறேன் நான். சில நண்பர்கட்கு முகம் கறுக்குகிறது. லேசாக மண்டபம் நோக்கி நழுவுகின்றனர்.

அடுத்த அறைக்குள் செல்கிறோம். அழகான பொம்மைகள் அணிவகுத்து நிற்கின்றன. இவையனைத்தும் சிப்பிகளாலானவை என்கிறாள் ஒரு சிறுமி. ஆச்சரியத்தால் விழிக்கிறோம். சிறுமி முறைக்கிறாள். அப்பால் செல்கிறோம்.

குழந்தைகளின் துணிகள், சிறு சட்டைகள் எல்லாம் தெரிகின்றன ஒரு அறையில். மேலே நோக்குகிறோம். வீட்டுப்பணி என்கிறது விளம்பரம். யாருக்கு வேண்டும் இந்தப்பணி எனக்கூறிக்கொண்டே பக்கத்துமண்டபத்துள் பாய்கிறோம்.

மொன்றிசோரி என்றொரு பெண்ணும் பாலரைப் பயிற்றுவதுபற்றி ஏதோ கூறினாளாம். ஒரு அறையை அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். பாலர் களரியாம்– நவீனமுறைகளாம். ஆமாம் கொன்வென்ற் என்றால் குழந்தைகளும் குதூகலமாக ஓடுவது இதற்குத்தானோ?

சூரியன் அஸ்தமிக்கிறது. மெரிகோரவுண்ட் வலம்வருகிறது. வானொ

அமெரிக்க பகுதியைப் பார்ப்பவர்கள் எல்லாரும் மேலே நோக்குகின்றனர். யானும் தலையை உயர்த்துகிறேன். கென்னடிப்பயல் அழகிய மனைவியோடு ஆனந்தமாகக் காட்சி தருகிறார்; கென்னடி குடும்பத்தை ஆவலோடு பார்க்கிறேன். அந்தா அது தான் பீற்றர் லோபோட். அமெரிக்க கொலிவூட் நடிகர். கென்னடியின் மைத்துனர் என்றெல்லாம் ஆங்கிலப் படம் பார்ப்பவர்கள் அமர்க்களப்படுகின்றனர்.

கீழே இறங்குகிறோம். கால்களில் தளர்ச்சி; முகத்திலே சோர்வு; தொண்டையில் வரட்சி; வயிற்றிலே பசி.

நண்பர் கூட்டம் சேர்கிறது. மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள்.

போசனசாலையை முற்றுகையிடுகிறோம். அழகான தட்டுகளில் அடுக்கடுக்காகப் பலகாரங்கள் வருகின்றன. சுவைத்துக்கொண்டே கண்காட்சிபற்றி அளவளாவுகிறோம்.

சிலர் கூறுவது மற்றவர்கட்குப் புதிராகவிருக்கிறது. நாம் ஒன்றுகூற, மற்றவர்கள் அதைக் காணவில்லையென்று சாதிக்கப் பிரச்சனைகள் அதிகமாகிறது. முடிவில் சனத்திரளின் அதிகரிப்பால் பல காட்சியறைகட்கு நாம் செல்லவில்லையென்பது தெரிகிறது.

ஆமாம், திருக்குடும்பக்கன்னியர் மடத்துக் கண்காட்சியைப்பற்றித்தான் கூறுகிறேன். நூற்றாண்டுவிழாக் கொண்டாடியவர்கள் ஒருவாரகாலத்துக்காவது கண்காட்சியை நீடித்திருக்கக்கூடாதா? கிடைத்தற்கரிய இக் கலைக்காட்சியை [illegible] லாக, ஆ[illegible] தற்கு?

# மனைமாட்சி

## (மறை முதல்வன்)

அப்பாவின் நண்பர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் இவ்வளவுநாளும் தாம் பார்த்துவந்த உத்தியோகத்துக்கு முழுக்குப்போட்டுவிட்டு நிம்மதியாக வன்னிப்பகுதியில் கமஞ் செய்கின்றாராம். "ஏன் உத்தியோகத்தை விட்டீர்"? என அப்பா கேட்டார். "வயசு நாற்பதுக்கு மேலாகிவிட்டது. குடும்பத்தொல்லையோ ஒருபுறம். இந்தநிலையில் சிங்களம்படிக்கச் சொன்னால் எப்படிமுடியும். அது தான் இப்படிச் செய்தேன்" என்றார் அப்பாவின் நண்பர்.

"அட! ஆச்சரியமாயிருக்கிறதே! மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டதுபோல் எப்படி ஐயா பேனையோட்டுந் தொழிலுக்கும் கலப்பையோட்டுந் தொழிலுக்கும் ஒத்துவரப்போகிறது. வீணாக உள்ள வேலையும்போய் அமுதசுரபி ஏந்தவா போகிறீர்" என்றார் அப்பா.

"நன்றாயிருக்கிறது உங்கள் கிண்டல். முன்னுக்கு வருகிறாரா இல்லையா என்பது உடனே தெரியுமா? போகப் போகத்தானே தெரியும்" என்றாள் அம்மா. "உழவுத்தொழில் உண்மையான அமுதசுரபியல்லவா? தமக்குத் தோன்றியதை எப்படியும் செயலில் நடத்திவிடுவது என்னும் தணியாத தாகமுள்ளவர்கள் வெற்றியடைவார்கள்" என அம்மா மேலுங் கூறினாள்.

"அதற்கல்ல உத்தியோகம் செய்து பழகியவர்கள் உழவுத்தொழிலில் கடினமாக உழைக்க உடம்பு வளைந்து கொடுக்காது. உழவுத்தொழிலுக்குக் கடின உழைப்பு இன்றியமையாதது. அதனாற்றான் அப்பா அப்படிச்சொன்னார்" என்று கூறினார் பெரியண்ணன்.

இப்பேச்சுக்களைக் கவனித்துக் கொண்டிருந்த தங்கை இராணி, "அமுத சுரபி" என்றீர்களே அது என்ன?" எனக் கேட்டாள். அக்கா சொன்னாள்: "மணிமேகலை என்ற ஒரு பெண்ணுக்கு அற்புதமான பிச்சையோடு ஒன்று கிடைத்ததாம். அந்த ஓட்டில் உணவு குறையாமல் பெருகிக்கொண்டிருந்தது; அதைக்கொண்டு பஞ்சத்தால் வாடியவர்களை அப்பெண் காப்பாற்றினாள்; இது மணிமேகலை என்னுந் தமிழ்நூலில் விரிவாக இருக்கிறது. அமுதசுரபியை அப்பா பிச்சையோடு என்ற பொருளில் கிண்டல் செய்ய, அம்மா அது உணவளிக்கும் ஊற்று எனும்பொருளில் சொன்னார்."

"இந்த அமுதசுரபி எங்கள் நிதி மந்திரியிடமிருந்தால்" என்று சத்தியராசன் கூறவும், இரத்தினம் "அரிசி வெட்டுப்பற்றிய பேச்சே எழுந்திராது" என முடித்தான். "இறைவன் அமுதசுரபியை அளிக்காவிட்டாலும், அவரால் படைக்கப்பட்ட பூமி அமுதசுரபி போன்றதே. முயற்சி செய்தால் எங்கள் நாட்டை விவசாயத்தினால் விருத்திசெய்ய முடியும்" எனப் பெரியண்ணன் சொன்னார்.

"கத்தோலிக்கராகிய எங்களுக்கு இறைவன் ஞானமுதசுரபியைத் தந்திருக்கிறார்" என்றார் அம்மா. எல்லாரும் அம்மாவை நோக்கினோம். அவர் திவ்விய நன்மையைப்பற்றி ஒரு சிற்றுரை வழங்கினார். அவர் கூறியது:

"எங்கள் பிதாவின் இராட்சியத்தில் நாம் எல்லாரும் பரலோக மணவிழாவைக் கொண்டாடி எப்பொழுதும் கிறிஸ்துவோடு ஒன்றித்திருப்போம். மட்டில்லா மகிழ்ச்சியோடு இறைவனின் துதிகளைப் பாடுவோம். உளம்நிறைந்த நன்றியோடு எப்பொழுதும் கிறிஸ்துநாதரின்மரணத்தை நினைவுகூருவோம். நாங்கள் எல்லாரும் தெய்வீக வாழ்வில் நிறைவுடையவர்களாவோம். இப்பரலோக விழாவின் முன்னோடியாகத் திவ்விய நன்மையைக் கொண்டாடுகிறோம்." அப்பா அதைத்தொடர்ந்து, "யேசுநாதர் தாம் பாடுபடுதற்கு முதவிரவு தமது மாணவர்களோடு பந்தியமர்ந்து தாம் இறப்பதற்குமுன் அவ்விருந்தை அவர்களோடு உண்ணநெடிது விழைந்ததாகச் சொல்லி, அப்பத்தையெடுத்து; நன்றிசெலுத்தி அதனைப் பிரித்துத் தமது மாணவர்களிடம் கொடுத்து, "உங்களுக்காகக் கையளிக்கப்பட்ட எனது சரீரம் இது. இதை வாங்கிப்புசியுங்கள்," என்றார் எனச் சொன்னார். அப்படியே பாத்திரத்தைக் கையிலேந்தி "இதை வாங்கிப் பானம் பண்ணுங்கள். ஏனெனில் உங்களுக்காகவும் அநேகரின் பாவப் பொறுத்தலுக்காகவும் சிந்தப்படும் புதிய ஏற்பாட்டின் நமது திருஇரத்தம் இதுவே; இதை எனது நினைவாகச் செய்யுங்கள்" எனவும் கூறினார் என்றாள் அக்கா.

"எங்களில் அநேகர் திவ்வியபலி, திவ்வியநன்மை என்பனபற்றி நன்கு விளங்காமலிருக்கிறோம். திவ்வியபலி கத்தோலிக்கராகிய எங்கள் எல்லோரையும் இன, மொழி முதலிய வேற்றுமைகளின்றி ஒற்றுமைப்படுத்தும் ஒரு பொதுவிருந்து. இதை நாங்கள் சரிவர உணருவோமானால் எங்களிடையே பகைமை உணர்ச்சிக்கு இடமில்லை. கத்தோலிக்கராகிய நாம் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் சாதிவேற்றுமை பாராட்டமாட்டோம். தமிழ்பேசும் கத்தோலிக்கர் இதை நன்கு விளங்கி மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாகத் திகழவேண்டும். கத்தோலிக்கர் இதில் ஒரு புரட்சியைக் கூடச் செய்யலாம்" என அப்பா சொன்னார். கூடியிருந்தவர்கள் எல்லாரும் அப்பாசொன்னதை ஆமோதித்து எல்லாருங்கூடித் திருச்சங்கம் வெற்றியடையச் செபம்சொல்லிக் கலைந்தோம்.

## A LECTURE

Under the auspices of the Confraternity of the Sacred Heart of Jesus, Rev. Fr. B. Wm. JesuThasan, O.M.I., will deliver a lecture entitled "Our Protestant Brethren, what can we do to help them", on Sunday the 14th inst. at 5-30 p.m. at St. Aloysius' Confraternity Hall.

All are welcome.

*Hony. Secy.*

## டைம் சஞ்சிகை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்கின்றன பல அரசாங்கங்கள்.

கடந்தவார சஞ்சிகை பாப்புவின் எழிலோவியமொன்றைப் பாப்புவின் வர்ணமான மஞ்சலைப் பின்னணியாகக்கொண்டு தீட்டியுள்ளது. இவ்வோவியம் பிரபல இத்தாலிய கலைஞர் பியாட்டோ அனிக்கோனி என்பவரால் இச் சஞ்சிகைக்கெனத் தயாரிக்கப்பட்டது. பண்பு, எளிமை, அன்புள்ளம் கொண்டவர் பாப்புஎன இவர் திருச்சபைத் தலைவரை வர்ணிக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday October 13-1962

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org